// பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"
—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

| மாலை 2 | ஞாயிறு 28-5-39 பிரமாதிஞு வைகாசிமீ 14உ | முத்து 9 |
|---|---|---|

# பாரத மணி

## பொருள் அடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| மற்றொரு பலியா? | ... ... ... ... ... | 256 |
| குறிப்பு | ... ... ... ... ... | 258 |
| போகிற போக்கில் | ... ... ... ... ... | 260 |
| உலகப் போக்கு | ... ... ... ... ... | 262 |
| ஜடாதரன் கல்யாணம் | ... ஸ்ரீ. கே. எஸ். வேங்கடரமணி | 263 |
| கண்ணீர் | ... ... ஸ்ரீ. ரா. ஹரிஹரன் | 268 |
| தபால்காரன் | ... ஸ்ரீ எஸ். எல். நாராயணன் பி. ஏ. | 270 |
| செவ்வானம் | ... கோத்தமங்கலம் ஸ்ரீ சுப்ரமண்யம் | 272 |
| ஐந்து கடிதங்கள் | ... ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஸ்ரீனிவாஸன் | 273 |
| சிறுவர் பகுதி | ...ஸ்ரீ.கே. எஸ். நரசிம்மாச்சாரி பி. ஏ. | 276 |
| பகவானே! | ... ... ... "வஸந்தன்" | 278 |
| சாரீரம் | ...ஸ்ரீ. ஆர். கே. விசுவநாதன் எம். ஏ. | 281 |
| தியாகபூமி டாக்கி | ... ... ... ... ... | 285 |


"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



# மற்றொரு பலியா?

"டான்ஜிக் ஐரோப்பாவின் அபாயஸ்தானம், ஜெர்மனி அதைத்தொட்டால் போச்சு! உடனே யுத்தம்தான்" என்றெல்லாம் சில வாரங்கள் ஜனநாயக நாடுகளில் முழக்கங்கள் நடந்தன. சேம்பர்லேன் விழித்துக்கொண்டு விட்டார்; ஹிட்லரை எச்சரிக்கை செய்துவிட்டார். போலந்துக்கு ஸ்ரீ கிருஷ்ணன்போல நிழலை (குடை) அளித்து அபயப்பிரதானம் செய்துவிட்டார். ரஷ்யாவுடன்கூட பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்துவிட்டார் என்று நாடி உயர்ந்து கொண்டே போயிற்று.

இப்பொழுது சட்டென்று நாடி விழுவதற்கு அறிகுறியாக சில சம்பவங்கள் ஏற்பட்டு விட்டன. திடீரென்று "டான்ஜிக் பிரச்னை விஷயமாக ஒரு யுத்தம் நேரிடும்படியாக அது அவ்வளவு மகாப்பிரமாதமான விஷயமல்ல" என்று டைம்ஸ் பத்திரிகைக்கு ஞானோதயம் ஆயிருக்கிறது. "டைம்ஸ்" பத்திரிகை எப்பொழுதும் பிரிட்டிஷ் சர்க்காரின் செயல்களுக்கு ஒரு வியாக்கியான கர்த்தா. முகவுரை பின்னுரையெல்லாம் அழகாக எழுதி சர்க்கார் கட்சியை ஆதரிக்கும். "டைம்ஸ்" இன்று டான்ஸிக்கைப் பற்றி இப்படிக் கூறுவது கொஞ்சம் சந்தேகத்தைத் கொடுக்கக் கூடியதாய்த்தான் இருக்கிறது.

மறுபடியும் பிரிட்டிஷ் பிரதம மந்திரி தனக்கு வாடிக்கையான பழைய வழ வழாக் கொள்கைக்குத் திரும்பிப்போய் விட்டாரா? (அதாவது அதையே விடாமல் கைக்கொண்டு இத்தனைநாள் வேறு விதமாக நடித்துக்கொண்டிருந்தாரா?) கடைசியில் போலந்தும் முந்தி பலியான நாடுகள் போன வழியேதான் போகப்போகிறதா? இன்னும் சேம்பர்லேன் ஹிட்லர் சொன்னபடி ஆடவேண்டியிருக்கிறதா? எதனால் திடீரென்று "டைம்ஸ்" பத்திரிகை இப்படி எழுதுகிறது? இந்த மாதிரி வரிசையாகக் கேள்விகள் எழத்தான் செய்கின்றன.

அதற்கேற்றாற்போல ஜெர்மனியில் ஒரே கொக்கரிப்பாக இருக்கிறது. ஒரு ஆங்கிலப்பத்திரிகை இந்தமாதிரி எழுதிவிட்டால்? அத்துடன் ஜெர்மன் இதாலி ராணுவ ஒப்பந்தமும் கையெழுத்தாகிவிட்டது. முசோலினி ஒரு பக்கம் கூத்தாடுகிறார். "எங்களை யாராலும் எதிர்க்க முடியாது. எங்கள் ஒற்றுமை தகர்க்க முடியாதது. உலகம் புரண்டுவந்தாலும் நாங்கள் ஒருகை பார்ப்போம்!!" என்று வீராவேசத்துடன் கத்துகிறார்.

மே 21-ம் தேதி டான்ஜிக்கில் ஜெர்மன் போலிஷ் நெருக்கடி ஒன்று ஏற்பட்டு விட்டது. ஒரு ஜெர்மன் கூட்டம் போலிஷ் சுங்க ஆபீஸை அழித்து விட்டது. அதிலிருந்து சுங்க அதிகாரி வெளியேறி விட்டார். பீகிள் என்ற இடத்தில் மாலை ஐந்து மணிக்கு மற்றொரு சுங்கச் சாவடியை ஜெர்மன் நாஜிக்கட்சியைச் சேர்ந்த ராணுவ தளம் ஒன்று தாக்கிற்று. தாக்கினவர்கள் சற்று முன்தான் ஒரு நாஜிக்கட்சிக் கூட்டத்திலிருந்து வந்தனராம். முன் நடந்த முற்றுகையில் ஒரு ஜெர்மானியனை

போலிஷ் மோட்டார் டிரைவர் சுட்டு விட்டான்.

அவ்வளவு தானே காரணம் வேண்டியது ஜெர்மனிக்கு. கர்ஜித்துக்கொண்டு எழுந்து போலந்தின்மீது பாயவேண்டியதுதானே இனிமேல்? பிரிட்டிஷ் பத்திரிகைதான் ஒருவாறாக பிரிட்டிஷ் சர்க்காரின் மனதை ஜெர்மனிக்குத் திரையைத் தூக்கிக் காட்டியிருக்கிறது, கொஞ்ச காலத்துக்கு முன்பே ஹிட்லர் முடித்திருக்க வேண்டிய காரியம் அல்லவா இது? பிரிட்டன் செய்த ஆர்ப்பாட்டத்தைக் கண்டு, பாவம், கொஞ்சம் திகைத்துப் போனார்.

இப்பொழுது அவருக்குத் திகைப்பு தீர்ந்து போயிருக்கும். அதனால்தான் 21-ம் தேதிய சம்பவங்கள் நடந்திருக்கின்றன. போலந்தின்மீது குற்றம் சாட்ட ஏதாவது கொஞ்சம் காரணம் வேண்டாமா? அது ஏற்பட்டுவிட்டது. ஹிட்லர் கடைசியாக, இவ்வளவு நாள் மௌனத்திற்குப் பிறகு, ஒரு தீர்மானத்திற்கு வந்து விட்டார் போலிருக்கிறது.

"டைம்ஸ்" சொன்னது போலல்லாமல் பிரிட்டிஷ் சர்க்கார் சொன்னபடி செய்ய முன் வந்தால் இன்னும் நிலைமை முற்றிப் போகாது. ஹிட்லர் மிகவும் ஜாக்கிரதையாகத்தான் இருக்கிறார். மெள்ள ஆழம் பார்த்துவிட்டுத்தான் முன்னேறுவார். பிரிட்டன் சரியான சமயத்தில் விட்டுக் கொடுத்துவிட்டால் ஐரோப்பாவில் மற்றொரு நாடு ஹிட்லருக்குப் பலியாகி விடும்.

---

## மன்னர் சிகாமணி

பழைய ஹிந்து அரசர்களின் பரம்பரை போன்று தற்காலம் உண்மையாகவே நாட்டின் நலத்தைத் தன் நலமாகக் கோரும் மன்னர்களில் மைசூர் மகாராஜா மாட்சிமை தங்கிய ஸ்ரீ கிருஷ்ணராஜ உடையார் பகதூர் அவர்கள் தலைசிறந்தவர். மக்கள் அவரை எவ்வாறு போற்றுகின்றனர் என்பதை மைசூர் சென்று கொஞ்ச காலம் இருந்தவர்கள் அறிவார்கள்.

அவருடைய ஆட்சியின்கீழ் (அவர் 1884-ம் வருஷம் ஜூன் மாதம் 4-ம் தேதி பிறந்தார்; 1895-ம் வருஷம் பட்டத்திற்கு வந்தார்) நாற்பது, நாற்பத்தைந்து வருஷங்களில் மைசூர் சமஸ்தானம் எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறது! ஜனங்கள் எவ்வளவு வசதிகள் பெற்றிருக்கிறார்கள்! அவ்வளவும் மகாராஜாவின் ஊக்கத்தாலும் திவான்களை ஆதரிக்கும் தன்மையாலும் ஏற்பட்டது தான்.

ஜனங்களின் வாழ்க்கை வசதிகள் மட்டுமல்ல அவருடைய ஆட்சியில் விருத்தியடைந்தது. நற்கலைகளுக்கும் அவர் இடைவிடாமல் ஆதரவு அளித்து அபிவிருத்தி செய்து வந்திருக்கிறார். சிறப்பாக சங்கீதத்திற்கு அவர் எவ்வளவு ஆதரவு அளித்திருக்கிறார் என்பது எல்லோரும் அறிந்த விஷயம்.

மே மாதம் 29-ம் தேதி அவருடைய ஜன்ம நக்ஷத்திரம். இந்த மன்னர் நக்ஷத்திரம் உதித்து 55 வருஷங்கள் ஆகின்றன. அவருடைய ஆயுளும் புகழும் நற்கருமங்களும் ஓங்குக!

---

குறிப்பு

# இலங்கை இந்தியர்

இலங்கையிலிருந்து இந்தியரை வெளியேற்றும் திட்டத்தை இலங்கை சர்க்கார் அமுலுக்குக் கொண்டு வந்துவிட்டார்கள். அதன்படி ஐந்து வருஷங்களுக்கு உட்பட்டு சர்க்கார் வேலையில் அமர்ந்த எல்லா இந்தியத் தொழிலாளர்களும் இந்தியா திரும்பவேண்டும். அதுமட்டுமில்லை. ஐந்து வருஷங்களுக்கு மேற்பட்டு இலங்கை சர்க்காரில் வேலையாக இருப்பவர்களும் இன்னும் இரண்டு வருஷங்களில் ஊர் திரும்பவேண்டி யிருக்குமாம்! இப்பொழுது வேலையிலிருந்து நீக்கப்படுபவர்களுக்கு ஒருமாதச் சம்பளமும் ரயில்வே டிக்கெட்டும் கொடுக்கிறார்களாம். இனிமேல் நீங்குகிறவர்களுக்கு அதுகூடக் கிடையாது! இதற்கெல்லாம் காரணம் இலங்கையில் இலங்கை நாட்டார் வேலையில்லாமல் திண்டாடுவதுதானும்!

தாய்நாட்டு உறவுகளை அறவே ஒழித்து இலங்கையே சரணம் என்று வெளியேறி அங்கே குடியேறினவர்களை இந்தமாதிரி இலங்கை சர்க்கார் திட்டம்போட்டு திருப்பி விரட்டுவது இலங்கையின் வேலையில்லாத் திண்டாட்டம் ஒன்றால் மட்டுமல்ல என்று நினைக்கிறோம். “இலங்கையர்களுக்கு இலங்கை” என்ற வோர் குறுகிய தேசாபிமான வெறியின் விளைவு இந்த முயற்சி.

இலங்கை இந்தியாவைவிட்டுத் தற்சமயம் ராஜீய வகையில் பிரிந்திருக்கிறது உண்மை. ஆனால் சரித்திரம் தொடங்கிய நாள் முதல் இலங்கை இந்தியாவுடன் இணைப்புகொண்டது. இலங்கையரும் இந்தியர்கள்தான்; இந்திய நாகரிகத்தின் குழந்தைகள்தான் அவர்கள். அதுவும் தமிழ் நாகரிகம்தான் இலங்கையில் ‘முழுக்க முழுக்க’ செல்வாக்குப்பெற்று இருந்திருக்கிறது.

அப்படியிருக்க இலங்கை சர்க்கார் இந்த மாதிரி நடந்துகொள்வது மிகவும் வருந்தத் தக்கது. இந்தியாவுடன் இலங்கை கலக்க இஷ்டப்படாவிட்டாலும் கூட இந்தியரை இலங்கையிலிருந்து பகிஷ்கரிப்பது இருதேசங்களிடையே ஒருதுவேஷ புத்தியைக் கிளப்புவதாக இருக்கிறது. இந்த நடவடிக்கையைக் கண்டு ஏன் இந்திய சர்க்கார் சும்மா இருக்கிறார்கள் என்று நாம் கிளர்ச்சி செய்யவேண்டியிருக்கிறது. அதேமாதிரி இந்திய சர்க்காரும் இலங்கைமீது எதிர் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நாம் தூண்ட வேண்டி ஏற்படுகிறது.

இலங்கையில் குடியேறி யிருக்கும் இந்தியர் முக்கியமாகத் தமிழரும் மலையாளிகளும்தான். ஏற்கனவே திருவாங்கூர் சமஸ்தானம் இது சம்பந்தமாக இந்திய சர்க்காருக்கு எழுதிவிட்டதாகத் தெரிகிறது. சென்னை சர்க்காரும் தகுந்த முறையில் தன் பிரஜைகளின் சார்பாக இந்திய சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தூண்டும் என்று நம்புகிறோம்.

## முன்னணிக் கட்சி

காங்கிரஸில் பிளவு ஏற்படுவதால் பாதகமொன்றுமில்லை என்று எழுதினோம். அதனால் இருதரத்தினரும் ஊக்கம்பெற்று கட்சி பலத்தைப் பெருக்க முயல்வதில் நாட்டில் விழிப்பு அதிகமாகும். ஆனால் பிளவு உண்மையாக இருக்கவேண்டும்.

ஸ்ரீ. சுபாஷ் சந்திரபோஸ் ஸ்தாபித்திருக்கும் ‘முன்னணிக்கட்சி’ காங்கிரஸில் ஏற்பட்ட ஒரு உண்மையான பிளவின் பலன் அல்ல என்பது அதன் ஆரம்பத்திற்குப் பிறகு சுபாஷ் செய்த பல பிரசங்கங்களிலிருந்து வியக்தமாகத் தெரிகிறது. காங்கிரஸில் பிளவே ஏற்படவில்லையென்று மேலும் மேலும் ஊர்ஜிதமாகிறது.

முன்னணிக்கட்சி காங்கிரஸிற்குள்ளேயே ஒரு ‘மேடை’ என்கிறார் ஸ்ரீ போஸ் ஒரு சமயத்தில்; மற்றொரு சமயத்தில் காங்கிரஸின் அடிப்படையான கொள்கைகளுக்கு நேர் விரோதமான கொள்கைகளைப்புதுக்கட்சியின் லட்சியங்களாக விவரித்துக் கூறுகிறார். போஸ் சொல்லுவதைப் பார்த்தால் அவர் கட்சியில் சத்தியத்திற்கும் அஹிம்ஸைக்குமே அவ்வளவு மதிப்பு இல்லைபோலிருக்கிறது. புதுக் கட்சியினர் அஹிம்ஸைத் தத்துவத்தைக் கிண்டல் செய்கிறார்கள். காந்திஜியின் ராஜ்கோட் முறையை ஏளனம் செய்கிறார்கள். சத்தியாக்கிரகத்தைத் திருப்பிடித்துப்போன ஆயுதம் என்கிறார்கள்.

ஆனால் காங்கிரஸின் பெருவாரி சங்கியை இன்னும் சத்தியாக்கிரகத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறது. அது தான் நமக்கு தற்போது இருக்கும் ஒரே ஒரு எதிர்ப்புஆயுதம்-அஸ்திரம்—என்று கருதுகிறது. காந்திஜியின்

முறை தான் நாட்டின் முன்னேற்றத்திற்குச் சரியான முறை என்று தீர்மானமாகக் கூறி விட்டது.

சத்தியாக்கிரகத்திற்குப் பதிலாக போஸ் தயார் செய்திருக்கும் போர் திட்டம் என்ன என்பது இன்னும் தெரியவில்லை. ஆறு மாத வாய்தா கொடுக்கிறோம்; தீர்ந்தும் போகிறது, பிறகு என்ன செய்கிறது? போஸ் அதற்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்? ஆறு மாத வாய்தா பயமுறுத்தலுக்குப் பயந்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சமரஸம் பேச ஓடிவந்து விழும் என்று நினைக்கிறாரா?

பிரிட்டனின் யுத்தநெருக்கடி நிலைமையைத் தருணமாக வைத்துக்கொண்டு பிரிட்டனிடம் பேரம் பேசவேண்டுமென்பது தீவிர வாதிகளின் அபிப்பிராயம். அது கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிப்பது போலாகும் என்பது மட்டுமல்ல. அது காந்தியத்திற்கு விரோதம்; சத்தியாக்கிரக யுத்த தர்மத்திற்கு விரோதம். எதிரியை உயர்த்தி வெற்றிபெறுவதே அதன் லட்சியம்; எதிரியைத் தாழ்த்தி அது வெற்றி கொள்ளாது; ராஜ்கோட்டும் காந்திஜியின் இறுதி அறிக்கையுமே அதற்கு அத்தாட்சி.

எனவே ஸ்ரீ போஸின் முன்னணிக் கட்சி காங்கிரஸில் ஏற்பட்ட ஒரு பிளவின் அறிகுறி அல்ல. அது காங்கிரஸிற்குள் போர்முறையின் தீவிரத்தைப்பற்றி ஏற்பட்ட அபிப்பிராய பேதமல்ல. காங்கிரஸின் முறைக்கு விரோதமான மனப்பான்மையின் விளைவு. திட்டத்தைப்பற்றிக்கூட ஏற்பட்ட கட்சியல்ல. ஆதிக்கத்தைப்பற்றி ஏற்பட்ட கட்சி. ஆகையால் அதனால் நாட்டிற்குத் தீமை ஏற்படும் என்று பயப்படவேண்டியதில்லை. நன்மை வேண்டுமானால் ஒரு வேளை ஏற்படலாம்.

## ஐதராபாத் சத்தியாக்கிரகம்

முஸ்லீம் லீகின் முயற்சிகளாலும் செய்கைகளாலும் நாட்டில் ஹிந்து முஸ்லீம் உணர்ச்சி பேதங்கள் ஓரளவு அதிகமாகிக்கொண்டு வருகிற சமயத்தில் ஐதராபாத் சர்க்கார், அதை இன்னும் கிளறிவிடுவதுபோல, ஆரிய சமாஜிகளின் சத்தியாக்கிரகத்தை அடக்கு முறை கொண்டு அதிகப்படுத்துவதைக்கண்டு மிகவும் வருந்துகிறோம். அக்கிளர்ச்சி சம்பந்தமாக ஆரிய சமாஜிகள் போடும் கூட்டங்களால் துவேஷபுத்தி அதிகமாவதைக் கண்டும் கவலைப்படுகிறோம்.

ஐதராபாத்து சத்தியாக்கிரகம் மத சம்பந்தமான கிளர்ச்சி அல்ல; ஹிந்து சமூகத்திற்கு ஐதராபாத் சமஸ்தானத்தில் இருக்கவேண்டிய உரிமைகளைப்பற்றிய போராட்டம். சமீபத்தில் ஜவஹர்லால் கூறியபடி அது மத சம்பந்தமானது என்று காங்கிரஸ் சும்மா இருக்கவில்லை. ஐதராபாத் சர்க்கார் நியாயமான குறைகளை கிரமமாகத் தீர்ப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் சும்மா இருக்கிறது. ஆனால் நிலைமை நாளுக்கு நாள் கேவலமாகிக்கொண்டு வருகிறது. இப்பொழுதாவது ஐதராபாத் சர்க்கார் அடக்குமுறையை நிறுத்தி பிரஜைகளின் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வார்களா?

## அஹிம்சைக்குப் பரீட்சை

ராஜ்கோட் தனது அஹிம்ஸை முறைக்குப் பரீட்சை சாலை என்று காந்திஜி அடிக்கடி சொன்னதற்குப் பொருத்தமாக கயரின் தீர்ப்பின்படி கிடைத்த பலன்கள் யாவற்றையும் காந்திஜி விட்டுக் கொடுத்துவிட்டு தாகூர் சாகிபையும் வீர வாலாவையும் ஒப்பந்தத்திலிருந்து விடுதலை செய்துவிட்டார்.

இருபது வருஷங்களாக அதிகமாகவும், அதற்குமுன் வெகுகாலமாகவே சத்தியாக்கிரகத்தையும் அஹிம்சையையும் கடைப்பிடித்து வெற்றிமேல் வெற்றி பெற்றவர் இன்று ராஜ்கோட்டை தனது பரீட்சைசாலை என்று சொல்லுவதற்குக் காரணம் என்ன? இத்தனை நாள் அனுஷ்டித்த அஹிம்ஸை முறைக்கும் இப்பொழுது அனுஷ்டிக்கும் முறைக்கும் வித்தியாசமுண்டா?

காந்திஜீயின் சமீபகாலத்து எழுத்துக்களை ஆராய்ச்சி செய்துபார்த்தால் அஹிம்சை தத்துவத்தின் மற்றொரு பரிணாமத்தை அவர் இன்று பரிசிலனை செய்து வருகிறார் என்று தெரிகிறது. அந்தத் தீர்க்காலோசனையின் முடிவாக அவர் என்ன 'புது வழி'யைக் காண்பிப்பார் என்று இப்பொழுது யார் சொல்ல முடியும்?




நண்பர்களே, புதிதாய் நிர்மாணம் செய்யப்பட்ட ஓர் ஆரம்பக்கல்விப் பள்ளிக்கூடத்தின் குழந்தைகள் ஊரில் கலியாணமென்றால் லீவு எடுத்துக்கொள்வதுபோல், "போகிற போக்கிலும்" சென்ற சில வாரங்களாக ஆசிரியரிடம் உத்திரவு கேட்காமல் 'கத்திரி' லீவு எடுத்துக் கொண்டுவிட்டது. ஆசிரியரும் "பாரத மணி" உத்திரவின்றி காசி யாத்திரை கிளம்பிப்போய் கல்கத்தாக் குதூகலங்களை பார்த்து அனுபவித்து விட்டு சென்ற வாரந்தான் சென்னைக்குத் திரும்பினார்.

* * *

மார்ச் மாதம் 19-ம்தேதி நான் சென்னையைவிட்டு வட இந்தியா யாத்திரை புறப்பட்டபோது ரயில் பிரயாணம் செய்துகொண்டே "போகிற போக்கில்" இன்னும் உல்லாஸமாய் எழுதலாமென்று எண்ணித்தான் கிளம்பினேன். ஆனால் ரயிலோட்ட ஆனந்தத்திலும், வட இந்தியா நகர வாழ்க்கையின் பம்பரச் சுழலிலும் ஆழ்ந்த எனக்கு பேனா ஓட்டத்திலேயே மனது செல்லவில்லை. தவிர, இவ்வித இலக்கிய ரசாயனத்தை வெல்லம் போல் கடையில் வாங்கி மனையில் வைக்க முடியுமா? அனுபவங்கள், காட்சிகள், கொஞ்சகாலம், மனதிலும், உள்ளத்திலும் குட்டையில் மட்டைபோல் ஊறினால்தான் பிறகு நாரை எடுத்து கயிறாகத் திரிக்க லகுவாக முடிகிறது. இது எவருக்குமுள்ள அனுபவந்தான். ஆகையால் கொஞ்சகாலம் கழித்து சிறுகச்சிறுக நான் ராமேச்வரம் முதல் ஹிருஷிகேசம் வரையில் கண்டுகளித்த காக்ஷிகளைப்பற்றியும் கண்டு பேசிய மனுஷ்யர்களைப்பற்றியும் விவரமாய் எழுதலாமென்று நினைக்கிறேன். பிரதி வாரமும் நீங்கள் அஞ்சாமல் "பாரத மணி"யை வாங்கி வாசித்துப்பார்க்கவும். அதிருஷ்டம்போல் நடக்கும்.

* * *

கல்கத்தாவில்பத்துநாட்கள் தங்கினேன். தமிழ்நாட்டிற்குக் கண்ணாகவும் எனக்கு பெருமையான நண்பராகவும் இருக்கிற 'இந்தியன் பினான்ஸ்' ஆசிரியர் ஸ்ரீ ஸி. எஸ். ரங்கஸ்வாமியுடன் தங்கினேன். வாரச் சந்தையில் எப்படி எந்தவிதமான கறிகாயும் கிடைக்குமோ, (கலியாணத்திற்கென்றாலும் சரி, சிரார்த்தத்திற்கென்றாலும் சரி,) அப்படியே இவர் கிருஹத்தில் நீங்கள் எவர்களையும் சந்திக்கலாம். குமுட்டிக்காய் முதல் முட்டக்கோசு வரையில். இக்கூட்டத்தின் நடுவில், இருண்ட அறையில் மின் மினிப்பூச்சி பறப்பதுபோல் ஸ்ரீ ரங்கஸ்வாமி ஒளி வீசிக்கொண்டு மினுமினுவென்று ஒளி வார்த்தைகளைப் பொழிந்துகொண்டு பறந்துகொண்டேயிருப்பார். கையில் அகப்படமாட்டார். ஏரில் பூட்டமுடியாது. மின் மினிப்பூச்சியைக் கையில் பிடிப்பதும் உண்டோ! கண்ணால் கண்டுதானே களிக்கவேண்டும்?

இந்த சமயத்தில் ஸ்ரீமான் சத்யமூர்த்தி அய்யரும், "இந்தியன் எக்ஸ்பிரஸ்" ஆசிரியர் ஸ்ரீ போதன் ஜோஸபும், ஸ்ரீ ராமநாத கோயங்காவும் கூட வந்திருந்தார்கள். ஆனந்தக்கண்ணீரை மூட்டி உள்ளத்தை உருக்கி அழகாய் தினசரிப் பத்திரிகையில் தினசரி எழுதுவோர் ஸ்ரீ ஜோஸபைவிட வேறு யார் இருக்கிறார்கள்?' "இவர் எ கப்

ஆப் டீ" நான் வாசிக்காத நாள் கிடையாது. அதின் அருமையான சுவையே சுவை! எந்த மலைச்சாரலிலிருந்து, எந்தத் தேயிலைத் தோட்டத்திலிருந்து இலைகளைப் பொருக்கி எவ்விதம் பாடம் பண்ணி இவர் இவ்வளவு நுட்பமான ஒரு கோப்பை 'டீ'யை எப்படிக் கருப்பஞ்சாறுபோல் இறக்குகிறாரென்று எனக்குத் தெரியவில்லை. இவர் எழுதும் சக்தி நெடுநாள் வாழ்க!

* * *

கல்கத்தா, வட இந்திய நகரங்களிலெல்லாவற்றிலும் பல விதத்திலும் மாக்ஷிமை தங்கியது என்பது எனக்கு சந்தேகமில்லை. 200 வருஷத்திற்குள் சமீபத்தில் உண்டானதாயிருந்தாலும் தூங்குமூஞ்சி மரம்போல் அதிசீக்கிரத்தில் ஓங்கி உயர்ந்து வளர்ந்து செழிப்படைந்திருக்கிறது. ஆனால் தூங்குமூஞ்சி மரம்போல் கல்கத்தாவிற்கு அழுதுவிடிந்த தூக்கப் பார்வை ஒன்றும் கிடையாது. எங்கும் பரபரப்புத்தான், சுறுசுறுப்புத்தான்.

நமது தேசக் கிளர்ச்சிகளில் அரசியலில் இயக்கமிருந்தால் கல்வியிலும், கலைகளிலும் இயக்கம் ஒத்து வளர்வதில்லை. இப்படி ஒத்துப் போகாததினுல் தான் தேசிய வாழ்வில் பாரிசவாயு உபத்திரவம் உண்டாகிவிடுகிறது. ஆனல் வங்காளத்திலோ அது அப்படியில்லை. கிளர்ச்சியில் இரண்டு ஊக்கமும் ஒத்திருக்கிறதாகத்தான்எனக்குத்தெரிகிறது. கார்ய ரூபத்திலும் இவைகளை வெகுதூரம் நிறைவேற்றி யிருப்பதாகவும் தெரிகிறது. ஆகையால்தான் வங்காளிகள் தங்கள் தேசத்தைப்பற்றி எதையெடுத்தாலும் உயர்த்தியாகவே புகழ்ந்து கொள்கிறார்கள். அவர்கள் தங்கள் கொசுக்களைக்கூட கானசிகாமணிகளாகக் கொண்டாடுகிறார்கள். "கல்கத்தா மிகவும் நன்றாயிருக்கிறது. எல்லாவிதத்திலும் நேர்த்தியாயிருக்கிறது ஆனல் இந்த வெயிலும், புழுக்கமும் கொஞ்சம்கூட சகிக்க முடியவில்லை" என்று ஆதரவான குரலில் நான் ஓர் வங்காளி நண்பரிடம் புலம்பினேன்—இரண்டு ஷர்ட்டு, மூன்று கைக்குட்டைகள் நனைந்துவிட்டன. மணியோ காலையில் ஒன்பதுகூட ஆகவில்லை. இதைக்கூட எனது வங்காளி நண்பர் சகிக்கவில்லை. எல்லாம் கங்கா மாயியென்று கவிபோல் புழுக்கத்தைக்கூட ஒரே ஸ்துதியாய் வர்ணிக்க ஆரம்பித்துவிட்டார். வறண்ட உஷ்ணத்திற்கு, புழுக்கமான உஷ்ணம் எவ்வளவு விதங்களில் மேன்மையென்று விரல்விட ஆரம்பித்துவிட்டார். நான் மளமளவென்று அவர் சொல்வதை ஒப்புக்கொள்ள ஆரம்பித்துவிட்டேன். அன்னிய நாட்டில் சில்லரை விஷயங்களைப் பற்றிக்கூடவா சச்சரவு!

இதல்லவோ தேச பக்தி. இந்த தேச பக்தியின் கடுமையையும், போராட்டத்தையும்பற்றி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் நான் கண்டபடி கேட்டபடி அடுத்த வாரம் எழுதலாமென்று நினைக்கிறேன்.

—மணி

---


## வாழ்க்கையே வாழ்க்கை

(எஸ். வி. வி.)

பிரசித்தி பெற்ற ஹாஸ்ய எழுத்தாளரான எஸ். வி. வி. எழுதிய ஹாஸ்யக் கட்டுரைகளில் இருபத்து இரண்டைத் திரட்டி புஸ்தக ரூபமாக வெளியிடப்பட்டிருக்கிறது. விலை அணா 12.

பிரதிகளுக்கு:

சுவேதாரண்ய ஆச்ரமம், 312, தம்பு செட்டித் தெரு, சென்னை.

# உலகப் போக்கு

இந்த 1939 வருஷம் மேய் 22 தேதி காலை 11 மணிக்கு சுப சோபன முகூர்த்தத்தில் இதாலிக்கும் ஜெர்மனிக்கும் கல்யாண வைபவங்களுடன் ராணுவ ஒப்பந்தம் முடிந்து கையெழுத்தாயிற்று. இனிமேல் இரண்டு தேசங்கள் ஒருயிரும் ஈருடலுந்தான்.

ஆனால் ஆங்கிலோ ரஷ்ய ஒப்பந்தம் மட்டும் முடிய வேளை வரவில்லை. ஹாலிபாக்ஸ் ஜினிவாவுக்குப் போய் ரஷ்ய தூதர் மெய்ஸ்கியை சந்திக்கிறார். ஆங்கில தூதர் மாஸ்கோவில் ரஷிய அன்னிய நாட்டுக் காரியாலயத்தைத் தைரியமாய் மிதித்துவிட்டு வந்துவிட்டார் என்று தகவல்கள்தான் கிடைக்கின்றன. ஆனால் ஒப்பந்தம் கூடிய சீக்கிரம் ஏற்படும் என்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் கூறுகின்றன. பிரிட்டனுக்கும் ரஷ்யாவுக்கும் உள்ள சிக்கல்கள் தீர்ந்து விட்டதென்றும் சமீபத்தில் ஒப்பந்தம் ஏற்படுமென்றும் டெய்லி டெலிகிராப் கூறுகிறது. ஆனகான் என்ற இடத்தில் பிரஞ்சு அந்நியநாட்டு மந்திரி பானட் சமாதானத்திற்கு பிரான்ஸ் ஆசைப்படுவதாகப் பேசியிருக்கிறார். முஸோலினியும் ஜனநாயகங்களின் போர் மனப்பான்மையைக் கண்டித்து இதாலி சமாதானத்தை விரும்புவதாகப் பேசியிருக்கிறார். அமெரிக்க அயல்நாட்டு மந்திரி கார்டல்ஹல் தேசங்கள் பலாத்காரத்தைவிட்டு சமாதானமாக வேற்றுமையைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று கூறி 'சமாதானப் பல்லவியை' முடித்திருக்கிறார்.

டான்ஜிக் பிரதேசத்தில் குழப்பம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. எரிமலை புகைய ஆரம்பித்திருக்கிறது. நாஜிகளுக்கும் போலந்து தேசத்தாருக்கும் சச்சரவுகளும் அடிதடிகளும் நடந்து வருகின்றன.

கிழக்கே, 'வெளி மங்கோலியர்கள்' எல்லைப்புறத்தை மீறி விட்டதாக ஜப்பான் புகார் கூறுகிறது.

பாலஸ்தீனத்தைப்பற்றி காமன்ஸில் நடந்த விவாதத்தில் எதிர்கட்சி அங்கத்தினர்கள் சர்க்கார் பாலஸ்தீனத்துக்குக் கொடுத்த வாக்குறுதிகளை மீறி விட்டதாகக் கூறுகிறார்கள். பாலஸ்தீனத்துக்கு அளிப்பதற்காகவிருக்கும் புதிய அரசியல் 'பால்போர் அறிக்கைக்கு' எதிரானது என்பது அவர்கள் கட்சி.

மகாத்மா காந்தி கிவயர் தீர்ப்பால் தமக்குக் கிடைத்த வெற்றியை விட்டுக் கொடுத்த பிறகு சில ரஸமான சம்பவங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தாகூர் சாகேப் காந்திஜியை திருப்தி செய்விக்கக்கூடிய அரசியல் திட்டத்தை அமைப்பாரென்று தெரிகிறது. கடைசியாக வந்த செய்திகள் அவர் ஓர் சீர்திருத்தக் கமிட்டியை அமைத்துவிட்டாரென்று கூறுகின்றன. காந்திஜி ராஜ்கோட்டில் செய்த ஓர் பிரசங்கத்தில் எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்றும், அரசரும் பிரஜைகளும் ஒத்துபோய் கடமையைச் செய்ய வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

சுபாஷ் பாபுவின் 'முன்னணிக் கட்சியைக்' கண்டித்து பண்டித ஜவஹர்லால் நேரு கான்பூரில் பேசியிருக்கிறார்.

லக்ஷ்மணபுரியில் இன்னும் ஷியா-ஸுனி தகராறு தீரவில்லை. பிரதிதினமும் 'டபாரா' இயக்கத்தால் நூற்றுக்கணக்கான ஷியாக்கள் 'அரெஸ்ட்' செய்யப்படுகிறார்கள். ஆனால் ஒற்றுமை உண்டாக்க பிரபல தலைவர்கள் முயன்று கொண்டிருக்கிறார்கள்.

பதவி பெற்றதால் காங்கிரஸின் புரட்சி தத்துவம் அதிகப்பட்டிருக்கிறதே தவிர குறையவில்லை என்று ஸ்ரீ. சத்யமூர்த்தி ஓர் பிரசங்க்த்தில் கூறுகிறார்.

ஹைதராபாத் சத்தியாக்ரஹம் வலுத்து வருகிறது. அதிகாரிகள் விரைவில் தங்கள் சீர்திருத்தங்களை வெளியிடுவார்களென்று அறிகிறோம். இதுவரை சத்தியாக்ரஹத்தின் மூலதளமாகவிருந்த ஷோலாப்பூரில் ஆர்ய சமாஜிகளுக்கும் முஸ்லீம்களுக்கும் சச்சரவு ஏற்பட்டதால் அதனால் ஆர்ய சமாஜிகளை ஷோலாப்பூரிலிருந்து வெளியேறும்படி மாஜிஸ்ரேட் கட்டளையிட்டிருக்கிறார். இதைக் கண்டித்து பல ஹிந்துக்கள் பம்பாய் பிரதம மந்திரி, வைஸ்ராய் முதலியவர்களுக்கு மகஜர் அனுப்பியிருக்கிறார்கள்.

இந்த வாரத்திய நிகழ்ச்சிகளில் மிகவும் ஸ்வாரஸ்யமான செய்தி ஓம் மண்டலியைப் பற்றியதாகும். ஸிந்து கவர்னர் இனிமேல் கிருஷ்ணனும் கோபிகைகளும் கராச்சியில் நடமுடியாதபடி தடுத்துவிட்டார். இதனால் ஒரு பெரிய பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது— முக்கியமாக ஓம் மண்டலியில் சம்மந்தப்பட்டிருந்தவர்களுக்கு!

# ஜடாதரன் கல்யாணம்

எழுதியவர் :
ஸ்ரீ கே. எஸ். வேங்கடரமணி

மொழி பெயர்த்தவர் :
ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன்

## 2

ஜடாதரன் ‘தங்கமான’ பையன்; வறுமை வேறு அவன் ஸ்வபாவத்தை திருத்தியமைத்துத் தூய நிலையில் உயர்த்தியிருந்தது. அவனுக்கு உலகத்தில் இரண்டில்தான் அதிகமாகப் பிடித்தம்—தன் தாய், வானத்து நக்ஷத்திரக்கூட்டம். அவளையும் அவற்றையும் ஆச்சரியத்துடனும், வணக்கத்துடனும், ஒருவிதத் திகைப்புடனும் அன்புடனும் பார்த்துப் பார்த்து மௌனமாக மகிழ்ச்சி கொள்வான். வருஷத்தில் மூன்று தடவை விடுமுறையின் போது பையன் ஊருக்கு வந்து தாயைக் கண்டபோது அந்தப் பாசம் உணர்ச்சிச் சிகரங்களை அடைந்தது.

அவள் எதிர்பார்த்தபடி சரியாக ஏழு மணிக்கு ஜடாதரன் வீடுவந்து சேர்ந்தான். அவசர அவசரமாக வயலில் ‘விழுந்து’ வந்ததால் கணுக்கால் வரை சேறும் சகதியுமாக இருந்தது. பிள்ளையைக் கண்டு பெற்றவள் பரவசமாகிக் கண்ணீர் உதிர்த்தாள். ஈசுவர சன்னிதியில் நிற்பதுபோல ஜடாதரன் அவள் முன் சற்றுநேரம் கீழே பார்த்தவண்ணம் நின்றான். அது ஒரு புனிதமான முகூர்த்தம்—தாயும் மகனும் ஒருவரையொருவர் சந்தித்து நின்ற அந்த நேரம். விசாலாட்சியும் தன் வீட்டுத் திண்ணையிலிருந்தே எட்டி எட்டிப் பார்த்து மகிழ்ந்தாள். அவளுடைய திருட்டுப் பார்வையில் அவனைக் கைப்பற்றப்போகிறோம், தங்கைக்காக அவனை ஆக்கிரமித்துக்கொண்டு விடப்போகிறோம் என்ற த்வனிகூட இருந்தது.

இந்தத் தடவை தாயைப் பார்க்க வந்தபொழுது ஜடாதரன் ஒரு சிறு கூடையில் ஆரஞ்சுகளும், மாதுளைகளும், ஆப்பிள் என்ற அரிய ஆங்கிலப் பழங்களும் கொண்டு வந்திருந்தான். அதைப்பற்றி அவள் கேள்விப்பட்டிருக்கிறாள்.

“அம்மா, இதுதான் ஆப்பிள் என்பது. நம் மாம்பழம்போல் அவ்வளவு ருசி ஒன்றும் இல்லை; ஆனால் உடம்புக்கு நல்லது. தின்று பார்.”

பிள்ளை தனக்கெனக் கொண்டுவந்த அந்தக் காணிக்கையை சேஷி பெருமையுடன் வாங்கிவைத்தாள்.

“ஜடாதரா! உன் அப்பாவும் தாத்தாவும் இருந்து பார்க்கக் கொடுத்துவைக்கவில்லையே இன்றைக்கு! நீ இப்படி ஆளாகி அழகாக இருப்பதை அவர்கள் பார்த்தால் பூரித்துப் போவார்கள். வம்சத்துக்கு ஒரு பிள்ளை—”

“அழகென்று சொல்லுகிறாய், அம்மா? நிஜமாகவா? என் சிநேகிதர்கள் கேலி செய்வதுபோல நான்—” என்று இழுத்தான் ஜடாதரன். தன் முகத்தைப்பற்றி அவன் எண்ணிய பொழுது அவன் கை அவனையறியாமலேயே அவன் முகத்தைத் தடவிற்று.

அன்புததும்பும் பார்வையுடன் தாயார் ஆழமான அம்மை வடுக்கள் நிறைந்த முகத்தைப் பார்த்தாள். அவ்வடுக்களில் வியர்வை துளித்து நின்றது. வடுக்கள் அந்த அழகிய முகவெட்டைக் கெடுத்தன என்பது உண்மை. ஆனால் அந்த முகத்தில் அறிவும் சுத்தமும் உள்ளத்தின் தேஜஸும் தென்பட்டன. அவன் கண்களில் ஒரு மகத்தான ஏக்கம் இருந்தது; காற்றுப் போக்கில்லாத அடுப்பில் மங்கும் தணல் போல அவை தென்பட்டன.

“அம்மா, எனக்கு எப்பொழுது அம்மை பூட்டிற்று? அப்பொழுது அம்மை குத்துவது கிடையாதா?”

“நீ பிறந்த பதினோராம் நாள் முதல் 21 நாள் மகமாயி நம் வீட்டில் விளையாடினாள். நான் அவ்வளவு வேண்டுதலைகள் செய்து கொள்ளாவிட்டால் உன் கண்களையே கொண்டுபோயிருப்பாள் அவள்!”

ஜடாதரன் அதைக்கேட்டு நடுங்கினான்.

“நம் வம்சத்திற்கே ஒரு சாபமடா குழந்தை! பெரியவர்கள் எல்லோரும் பெரிய ஜோஸியர்கள்; ஆனால் அவர்கள் நல்லதைச் சொல்லமாட்டார்களாம்; கெட்டதையேதான் சொல்லுவார்களாம். மகமாயி தாயாருக்குக் கோபம்வந்து விட்டது. நான் வேண்டிக்கொண்டதில் உனக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தாள். அம்மைவடு இருந்தால் என்னடாப்பா, உன்னைப் போலே அழகும் படிப்பும்—இந்த ஊரில் யார் இருக்கிறார்கள்?”

“உன்கண்களுக்கு, அம்மா! அப்பொழுது அம்மை குத்துகிறது இல்லையா என்கிறேன்.”

“மகமாயி தாயார் கோபத்திற்கு அம்மை குத்தி என்ன செய்கிறது?”

ஜடாதரன் ஒரு நிமிஷம் மௌனமாக இருந்துவிட்டு “தாத்தா பெரிய ஜோஸியர் என்கிறாயே! என்னைப்பற்றி என்ன சொன்னார்?” என்று கேட்டான்.

“நீ நீச பாஷையில் நல்ல பாண்டித்தியம் பெறுவாய்; ரொம்ப நல்லவனாக இருப்பாய்; கலக்டராகவோ மந்திரியாகவோ ஆவாய்; நல்ல பணக்கார வீட்டுப்பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கொள்வாய் பத்தொன்பது வயதில். அது முதல் உனக்கு நல்ல காலம் என்று சொன்னார்.”

ஜடாதரன் உள்ளம் குளிர்ந்தது. அவன் அப்பொழுது மங்களத்தைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று தீர்மானம் செய்திருந்தான். கும்பகோணத்தில் இருந்தாள் அவள்.

“பணக்காரர் வீட்டுப்பெண்ணைக் கலியாணம் செய்து கொள்வதா? முடியாதம்மா முடியாது. கலெக்டர் ஆவதும் இல்லை. நான் இந்த ஊரில் திண்ணைப் பள்ளிக்கூடம் வைப்பேன் அதற்குப்பதிலாக. இந்த ஊரில் முப்பது பெண்களும் இருபது பையன்களும் எழுதப்படிக்கத் தெரியாமல் அலைகிறார்களே. இந்தத் திண்ணையைத் தான் நீ எவ்வளவு அழகாகச்செய்து வைத்திருக்கிறாய் அம்மா. அதை இன்னும் அழகு படுத்துகிறேன்.”

“ஜடாதரா, என்டாப்பா அசட்டுப் பிசட்டென்று ஏதோ சொல்லுகிறாய்? நீ நல்ல அந்தஸ்துக்கு வரப்போகிறாய். நான் படித்தவள் இல்லையப்பா; ஆனால் உன்னைப் பெற்று வளர்த்தவளல்லவா? உனக்குத்தெரியாது எனக்குத்தெரியும், நீ எப்படி முன்னுக்கு வரப்போகிறாய் என்பது. இப்பொழுதே திவ்வியமான ஜாதகங்கள் வந்து குவிகின்றன. சற்றுமுன் கூட அடுத்தாத்து விசாலாட்சி (மகா கர்வி) அவளே வந்து தன் தங்கை ஜயாவை இரண்டாயிரம் ரூபாய் வரதக்ஷிணையுடன் உனக்குக்கொடுக்கிறேன் என்றாள். வேடிக்கை இல்லை. ஜயா ரொம்ப அழகாக இருப்பள். நல்ல வம்சம். சாதாரணமாக நமக்குக் கிடைக்கத்தகாத சம்பந்தம்.”

ஜடாதரன் அனுதாபத்துடன் சிரித்தான். அந்த சிரிப்பில் ஒரு விசனக்குறியும் இருந்தது.

“அம்மா, எனக்குப் பரீட்சை இன்னும் இரண்டு மாதந்தான் இருக்கிறது. கல்யாணத்தைப் பற்றிப்பேச இதுவா சமயம்?”

சேஷி அதை வாஸ்தவம் என்று ஒப்புக் கொண்டாள்.

“அதுக்கென்ன இப்போ? பரீட்சைக்குப் பிறகு பேசுவோமே? நீ அடுத்த தடவை இங்கே வரபோது இந்தத் திண்ணைலே மேளங்கொட்ட வேண்டும். அப்போ தாண்டாப்பா என் மனசு குளிரும். அப்போ ஒண்ணும் ஆட்சேபனை சொல்லாதே, தெரியுமா?”

ஜடாதரன் ஏதோ யோசனையி லாழ்ந்தான். தாயின் குரல் வேறொரு உலகத்திலிருந்து வந்த ஒலிபோல அவன் காதில் பட்டது.

(3)

கும்பகோணம் அரசாங்கக் கலாசாலைக் கட்டிடம் வெகு அழகான இடத்தில் அமைந்திருக்கிறது. காவேரிக்கரையில் பெரிய மாந் தோப்பில் இருக்கிறது. பையன்களின் வளரும் அறிவு பயிற்சி பெறுவதற்கு உத்தமமான இடம் அது. பாடபுத்தகங்கள் குறுக்கே வந்து அவர்களுடைய சன் பார்வையைக் கவராவிட்டால், சுற்றியுள்ள இயற்கை அழகும்,

நிழல் தீட்டிய அந்தத் தோப்பும், துறவும், காவேரியும், கண்ணுக்கெட்டிய தூரம் பரவிய பயிரேறிய நஞ்சைகளும் வாலிபர்களின் மனதைக் கவர்ந்து களிப்பூட்டி மேன்மைப்படுத்தும்.

ஜடாதரன் இயற்கையாகவே எல்லாவற்றையும் ஆழ்ந்து கவனிப்பவன். தாயாருக்கு அடுத்தபடியாக அவன் அந்தக் காவேரியையும் நக்ஷத்திரங்கள் நிறைந்த வானையும் தான் காதலித்தான். பலசிறு தொழில்களை ஆதரிக்கும் விளையாட்டுக்களில் அவன் ஈடுபடுவதில்லை. மாலை நேரத்தில் காவேரிக் கரையோரமாக ஜலத்தின் ஒவ்வொரு சுழலிலும் சுற்றித் தவிக்கும் பூவையும் சுள்ளியையும் கவனித்துக் கொண்டே உலவுவான். கரைமேலுள்ள சிக்கல் கொண்ட வாழ்க்கையையும்—தன்னுடைய வாழ்வையும்—அது பிரதிபலிப்பது போலத் தோன்றும் அவனுக்கு. சந்தியாவந்தனம் செய்துவிட்டுப் படியில் உட்கார்ந்து ஜபம் செய்வான். அந்தச் சூழ்வும் அந்த நிலையும் அவனுக்கு அமைதியையும் ஆனந்தத்தையும் அளிக்கும்.

அப்போதுதான் பி. ஏ. பரீட்சை முடிந்தது. மாலை மிகவும் ரமணீயமான அமைதியில் மூழ்கியிருந்தது. இயற்கையே ஒரு ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டுவிட்டது போல இருந்தது. புரண்டோடும் வெள்ளம்கூட ஒரு க்ஷணம் தயங்கி, மிதந்து வந்து மலரிடம், சுழலில் இழுத்து அணைக்குமுன், காதோடு ஒரு காதல் வார்த்தை சொல்லுவதுபோல இருந்தது, ஜடாதரன் மனம் அலைந்தது. வானையும் பூமியையும், நீரையும், நிலங்களையும், அவன் மாறிமாறிப் பார்த்தே அந்த நிலையை ருசிப்பித்தது. ஜடாதரனின் உயிர்த்தோழன் கிட்டு, அவன் நிழல்போல அவனுடன் இருந்தான். அது வழக்கம். அவன்தான் அவனுக்கு ஒரு ஆறுதல்.

அன்று மாலை அவன் காவேரியிடமும் கிட்டுவிடமிருந்தும் பிரிவுகொள்ளும் சமயம். அவர்கள் கூடியிருந்த கலாசாலை நாட்கள் அன்று முடிந்தன. பாதைகள் பிரியும் காலம் வந்துவிட்டது வாழ்க்கையில். அதற்குமேல் அவர்கள் ஜீவியங்கள் தனித்தனியாகப் பிரிந்து பாயும் என்று உணர்ந்தார்கள். மேலே நதி பிறந்த மலைச்சரிவுகளில் பெற்ற சில சிறு இன்ப நினைவுகளேதான் மிஞ்சும்.

ஜடாதரனின் ஆழ்ந்த ஏக்கத்தை கிட்டு கவனித்தான்.

"ஜடாதரா, இன்றையப் பிரிவினையால் ஏற்பட்ட துக்கம் மட்டுமில்லை உன் முகத்தில் இருப்பது. ஏதோ ஒரு கவலை உன் உள்ளத்தைத் துளைக்கிறது. இன்னும் மங்களத்தைச் சுற்றியா உன் ஹிருதயம் வணங்கி எழுகிறது?" என்று கிட்டு அன்பு ததும்பக் கேட்டான்.

"அவளை நீ அடைய முடியாது. நாளைக்குக் காலையில் அவள் வேறொருவன் மனைவி ஆகிறாள். கடலை அடைந்துவிட்ட நதியின் ஜலம் பிறகு சுத்த ஜலமாகுமா? இந்த ஜன்மத்தில் இல்லை. இன்று மாலை அந்தப் பக்கமாக நான் வரும் பொழுது மங்களத்தின் வீட்டு வாசலில் நாளைய தினத்துத் தடபுடல்களுக்குப் பூர்வாங்கங்கள் நடந்து கொண்டிருந்தன. அவளைப் பற்றி இனிமேல் நினைக்காதே. அவளை மறந்துவிடு. பிடித்த மீனைப்போல இன்னும் கடலில் எவ்வளவோ மீன்!" என்றான் கிட்டு மறுபடியும்.

"அவள்தானேடா, கிட்டு, என்னை ஆகர்ஷித்தவள்? அவள் ஒருவளைத்தான் நான் முழுமனதுடன் நேசித்தேன். அந்த அயோக்கியன் மணிக்குக் கொண்டு தள்ளுகிறார்கள் அவளை, பாவம். அதுதான் எனக்கு இன்னும் வருத்தமாக இருக்கிறது. அவளுடைய வசீகரத் தன்மை உனக்குத் தெரியாது. நான் ஏதோ அதிகப்படுத்துகிறேன் என்று நீ நினைக்கலாம். என்னைப் போல நீ அவளை நெருங்கி அறிந்திருந்தால் தெரியும். நான் ஆறு மாதம் அவளுக்கு 'ட்யூஷன்' சொல்லிக் கொடுத்தேனல்லவா? அப்பொழுது அறிந்தேன் அவளுடைய மிருதுவான இயற்கையின் அறிவுச் சுழலையும் உணர்ச்சி ஆழத்தையும். அந்த வயதில் எந்தப் பெண்ணுக்கும் சாதாரணமாக அவ்வளவு தேர்ச்சி வருகிறதில்லை. பெண்மை அவளிடம் பரிபூரண உருவம் பெற்றுவிட்டதடா! ... ஆனால், நான் ஏழை, அழகற்றவன்—எப்படி அவளைப் பெற முடியும்?"

ஜடாதரன் சட்டென்று தன் முகத்தைத் தடவிய வண்ணம் "அடாடா, மங்களம்!

தாமரை மொட்டு இன்னும் வாழ்க்கையின் உதய சூரியனை இதழ் திறந்து பார்க்கவில்லை! ஐயோ, திறந்து பார்க்கவே போகிறதில்லை. மொக்கிலேயே கருகிப்போகப் போகிறுள். மணி தொட்டால் போதும் — எந்தப் பேரழகு கொண்ட புஷ்பம்தான் அவன் கையில் கருகாது? இந்த மாதிரி தப்புப் பிணைப்புகள் ஏற்படத்தானே ஈசுவரன்....''?

"ஜடாதரா, இன்னம் ஒரு நாள் தங்கி மங்களத்தின் கல்யாணத்திற்கு இருந்து விட்டுப் போயேன்! இருவரும் நம்மை அழைத்திருக்கிறுர்கள். கும்பகோணத்தை விட்டு ஒரே யடியாகப் போகும் பொழுது, கடைசியாக ஒருதடவை மங்களத்தைப் பார்த்துவிட்டுப் போயேன்."

"அது என்னல் முடியாது கிட்டு. அந்தக் கஷ்டத்தை என்னல் சகிக்க முடியாது. நல்ல வேளையாக இந்தத் தத்தளிப்பு என்ன என்பது உனக்குத் தெரியாது — சிறு வயதிலேயே உனக்குக் கல்யாணம் ஆகிவிட்டதால். என்னல் தாளாது. இன்றிரவு நான் காக்கழனிக்குப் புறப்படுகிறேன். கிழவி பாவம் — அம்மா — எனக்காக நிமிஷங்களை எண்ணிக்கொண்டு காத்திருப்பாள்."

"நீ பரீட்சையில் முதலாகத் தேறுவாய் என்று நினைக்கிறேன். காலேஜிலிருந்தது போல வாழ்க்கையிலும் உனக்கு நல்ல வெற்றி கிடைக்கட்டும்" என்று சொல்லும்போது கிட்டுவின் தொண்டை கம்மிற்று; கண்ணில் ஜலம் ததும்பிற்று.

"எய் கிட்டு! வாழ்க்கை எனக்கு முத்துச் சிப்பி போலக் குறுகிவிட்டது இப்பொழுது. இனிமேல் பாக்கி ஜீவியத்தை என் வீட்டுத் திண்ணையில் கழித்து விடுவதாகவே உத்தேசித்துவிட்டேன் கவலையின்றி. என் தாயாரின் அன்பு ஒன்று போதும் எனக்கு. நீ சொல்லுவது போல எனக்கு வாழ்க்கையில் வெற்றி கிடையாது. அந்த வேட்கைகளும் வெறியும் அடங்கி ஓய்ந்து விட்டன. நான் உனக்கு எல்லாம் எழுதுகிறேன். எனக்கென்னமோ இன்று பேசுவதே கஷ்டமாக இருக்கிறது. என்னை மறந்து விடாதே. உன் நட்புதான் எனக்கு இதுவரை என் தாயின் அன்பிற்கு அடுத்தாற்போல ஒரு பெரிய ஆறுதலாக இருந்தது. சரி, போவாமா?"

நண்பர்கள் இருவரும் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டார்கள்.

ஆற்று வெள்ளத்திலிருந்து கரையில் ஒதுங்கிய ஒரு அந்திமந்தாரைப்பூ அவர்கள் காலடியில் வந்து விழுந்தது.

(4)

காலை எட்டு மணிக்கு ஜடாதரன் காக்கழனி வந்து சேர்ந்தான். இந்தத் தடவை ஒரு இரட்டை மாட்டு வண்டியில் வீட்டிற்கு வந்தான். மாடுகளின் மணியோசை அவனுக்கு முன்னே சென்றது. வண்டி மூலை திரும்பி தெருவில் வந்ததோ இல்லையோ கிராமத்தின் இருபது பையன்களும் முப்பது பெண்களும் அதை வந்து சூழ்ந்துகொண்டார்கள். ஒரே கூச்சல், சந்தோஷம்!

திண்ணை வழக்கம்போலச் சுத்தமாயும் புதிதாயும் இருந்தது. இவ்வளவு பையன்களும் பெண்களும் வீணுகக் காலம் போக்குவது திடீரென்று அவன் மனதில் தைத்தது. அவர்களுக்கு ஏதாவது செய்ய முடியாதா என்று ஏங்கினன். அந்தக் கவலை அவனைச் சூழ்ந்துகொண்டது. தனக்கு ஏதோ ஒரு புதுக் காரியம் ஏற்பட்டுவிட்டதுபோல எண்ணினன். ஏதோவொரு வேலை தான் வருவதற்குத் தயாராகக் காத்துக்கொண்டிருந்தது போலத் தோன்றிற்று அவனுக்கு அப்பொழுது.

வாசற் படியில் நின்று சேஷி தன் பிள்ளையைக் கண்குளிரப் பார்த்துக்கொண்டிருந்தாள். விசாலாட்சியும் வழக்கம்போல தனது திருட்டுச் சந்தோஷத்தை அனுபவித்தாள்; அவளுக்குப் பின்னல் ஜயா அடக்கம் ஒடுக்கமாக, வெட்கம் உருவெடுத்து வந்தவளாய் பிறக்கப் போகும் தனது புது வாழ்வை நினைத்துருகி நின்றுள். ஊரிலேயே ஜடாதரனுக்கும் ஜயாவுக்கும் நடக்கப்போகும் கல்யாணத்தைப் பற்றித்தான் பேச்சு. முகூர்த்தம் கூட வைத்தாய்விட்டது. சேஷி ஒரு புதுப் பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் நடமாடினுள். ஆயுசு பூராவும் அன்புடனும் தியாக புத்தியுடனும் உழைத்த உழைப்

பிற்கு ஏற்பட்ட பலன் அல்லவா அவள் கண்டது?

"அம்மா! கல்யாணமா? எனக்கா? உனக்கு உலகம் தெரியாது. உன் புத்திர வாத்சல்யத்தில் நீ பெண்கள் மனதை அறியவில்லை. நான் இஷ்டப்பட்டபடி என்னுடன் வாழ்க்கை நடத்த எந்தப் பெண் சம்மதிப்பாள் என்று நினைக்கிறாய்? நடக்காத காரியம்."

"ஏண்டப்பா ஜடாதரா! இதென்னடா திடீரென்று இந்தமாதிரி பேசறே? ஏண்டா மாட்டா? எவ்வளவு பெண்கள் வேணும்? இந்த ஆத்தில் வாக்கப்பட்டு வாழக்கொடுத்து வைக்கணுமே! அதெல்லாம்தான் தீர்மானம் பண்ணியாச்சே. முகூர்த்தமே வச்சாச்சே! ஜயாவுக்கு முழுச் சம்மதம். அக்கா தங்கை இரண்டு பேருமா ஒரு கால்லெ நிக்கா, தெரியுமா?"

"நான் இந்தமாதிரி பெரிய அதிகாரம் உத்தியோகம் என்ற ஆசையை விட்டுவிட்டேன், திண்ணைப் பள்ளிக்கூடம் வைக்கப்போகிறேன் என்று அவர்களிடம் சொல். அப்பொழுது ஒரு காலால் நிற்கிறார்களா பார்ப்போம்."

"என்னடா இது? பைத்தியம் மாதிரி பேசறயே—எனக்கு ஒன்றுமே புரியலையே! நீ மாட்டேன்னா என்மனசு ஒடிஞ்சு போயிடும்—கொஞ்ச நாள் கூட நிக்காது என் பிராணன்".

"அம்மா! உன்மனசை நான் வேணும்னு உடையும்படி செய்வேனா? உன் பிள்ளை நிலைமை உனக்குத் தெரியவில்லை. அவன் பிறக்கிறபோது கிரகங்கள் எங்கெந்த துக்கஸ்தானங்களிலிருந்த தென்றும் உனக்குத் தெரியாது. அம்மா, நான் தனியாக, ஒண்டியாக, காலம் கழிக்க வேண்டுமென்றுதான் என் தலையில் எழுதியிருக்கிறது."

சேஷி திக்பிரமைகொண்டு நின்றாள்.


"அம்மா, நான் ஏதோ கடுமையாகப் பேசுகிறேன் அல்லது உன் வார்த்தையை சட்டைசெய்யமாட்டேன் என்கிறேன் என்று நினைக்காதே. நீ எனக்காக உழைத்து செய்ததற்கெல்லாம் என்ன செய்தாலும் தகும் அம்மா. ஆனால் என்வேலை வேறு என்று எனக்கு இப்பொழுது ஞானோதயம் ஆகிவிட்டது! நீ சொல்லுகிறபடி நான் செய்வதற்கில்லை. என்ன பண்ணுகிறது? நான் கலியாணம் பண்ணிக் கொண்டால் இரண்டு உயிர்கள் வியர்த்தமாகும். அவ்வளவுதான் அம்மா. ஆற்றோடு போகவேண்டிய மண்குடம் யாரும் தொடாமல் தனியாகப் போவதுதான் நல்லது."

தாயார் விம்மி விம்மி அழுவதைக்கண்டு ஜடாதரனும் கதறினான்.

(5)

ஜடாதரன் கல்யாணத்திற்காக ஏற்பட்ட முகூர்த்தத்தன்றே அவன் காக்கழனியில் தன் திண்ணையில் திண்ணைப்பள்ளிக்கூடத்தை ஆரம்பித்தான். ஊரே திரண்டு வந்து ஒரு உற்சவமாக நடந்தது திறப்பு விழா. குருவின் மனதிற்கும் சின்ன சிஷ்யக் குழந்தைகளின் உள்ளங்களும் ஏற்பட்ட அந்த மகத்தான மண மகோற்சவத்தின் பலனை இரண்டு தலைமுறைகளுக்கு அந்த ஊரின் சுற்றுப் பக்கத்தில் நூற்றுக்கணக்கான குழந்தைகளுக்கு அறிவும் ஆனந்தமும் ஏற்பட்டது.

ஜடாதரன் உத்தம குரு. பொறுமை பூண்ட இந்தத் தமிழ் நாட்டிலும் அவனை இன்று எல்லோரும் மனமாற வாழ்த்துகிறார்கள்.



# கண்ணீர்

(ஸ்ரீ ரா. ஹரிஹரன்)

முன்னுடியே ஏற்பாடு செய்திருந்தபடி கராச்சிக்குச் செல்லும் வழியில், பூனாவில் என் அண்ணாவின் நண்பன் வீட்டில் போய் இறங்கினோம். அங்கே ஒரு வாரம் தாமதித்து பிறகு கராச்சி போவதாக உத்தேசம்.

எங்களுடைய வண்டி நண்பன் வீட்டு வாசலில் வந்து நின்றது. வாசற்படியில் ஒரு யுவதி நின்றுகொண்டிருந்தாள். எங்களைக் கண்டதும் சட்டென மின்னல் தோன்றி மறைவதுபோல் உள்ளே போய் விட்டாள்.

"வா கிருஷ்ணு, வா! எப்போ வந்தே? இந்தத் தடவை நீ கட்டாயம் வருவேன்னு நினைச்சேன். வரேன் வரேன்னு 5 வருஷமாகச் சொல்லிக் கடைசியா இப்பவாவது உனக்கு வரத்துக்குச் சௌகர்யப்பட்டதே. ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லி லெட்டர் எழுதி வராமல் இருந்துவிடுவாய் என்று பயந்தேன்" என்று சொல்லிக் கொண்டே சுப்பையா எங்களை வரவேற்ருன்.

"மாமி, வாங்கோ! நீங்க வரப்போறேள் இன்னு நேத்திக்கே அப்பா சொன்ஞர்" என்று சுப்பையாவின் புதல்வி சரஸ்வதி என் மன்னியை வரவேற்ருள்.

சாமான்களை வண்டியிலிருந்து எடுத்து உள்ளே வைத்தபின் பலரும் பலவாறு பேச்சு ஸ்வாரஸ்யத்தில் ஆழ்ந்துவிட்டனர். நான் வெளித்திண்ணையில் உட்கார்ந்தேன்.

எல்லாரும் காப்பி சாப்பிட்டானதும் நான் மாடியில் ஒரு பத்திரிகையைக் கையில் எடுத்துச்சென்று போய் உட்கார்ந்தேன்.

எனக்கு அவர்கள் அகத்தில் அதிகமாக ஒருவரையும் தெரியாது. சுப்பையாவை மட்டும் என் அண்ணாவின் சிநேகிதன் என்ற ஹோதாவில் தெரியும். இருவரும் பால்ய நண்பர்கள். உயிர்த் தோழர்கள் தற்போது சுப்பையா பூனாவிலும், என் அண்ணா கராச்சியிலும் நல்ல சம்பளத்தில் இருக்கிருர்கள். ஏழு வருஷங்களுக்குப் பின் முதல் முதல் சந்திப்பதால் அளவற்ற குதூகலம் ஏற்படுவது இயற்கைதானே?

நாங்கள் வந்து இரண்டு நாட்கள் ஆயின. விருந்தினர்கள் வந்து வீடு நிறைந்திருந்தது. நான் அவளையே தேடிக்கொண்டிருந்தேன். வண்டியில் வந்து இறங்கும்போது கண்ணில்பட்ட அப்பெண்ணை அதன்பிறகு நான் காண முடியவில்லையே. ஏன்?

மறுநாள் மாடியில் சாயங்காலமாய் நான் உலர்த்தியிருந்த வஸ்திரங்களை எடுத்து வரப்போனேன்.

அவள் என் மன்னியுடன் "பாரத மணி" படித்துக்கொண்டிருந்தாள்.

"என்ன? கிராம முன்னேற்றம் எப்படிச் செய்யலாம் என்று படிக்கிறுப்போல இருக்கு!" என்றேன்.

இதைக் கேட்டதும் அவள் திடுக்கிட்டு எழுந்து அருகிலிருந்த தூண் மறைவில் நாணமுடன் ஒதுங்கி நின்ருள். அதில் என்ன அடக்கம்! எவ்வளவு பணிவு என் மதனி என்னிடம் "என்னடா ராமு? நாங்கள் கிராம முன்னேற்றம் செய்தால், நீ நகரத்தை எப்படி உத்தாரணம் செய்யலாம் என்று பார்க்க மூன்று நாளாய் ஊர் சுற்றப் போயிட்டாப்பலே இருக்கு.மூனு நாளா உன்னைக் கண்ணிலே காணலையே.ஊர் சுற்றுகிற வேலை இன்னும் முடியலைப் போலிருக்கு" என்று குத்தலாகச் சொல்ல, நான் "இல்லை, மன்னி! சுப்பையாவோடு இரண்டு நாளாய் ஸ்டுடியோவுக்குப் போயிருந்தேன். நேத்திக்கு கடைத் தெருப் பக்கம் சுத்தினேம். பூனு நல்ல சிதோஷ்ணம். சௌக்யமான ஊர்" என்றேன் ஒருவிதமாக.

அவள் ஒன்றும் பேசாமல் குனிந்தபடி தரையையே பார்த்துக்கொண்டிருந்தாள். நான் வஸ்திரங்களை எடுத்துக்கொண்டு கீழே இறங்கிவிட்டேன்.

* * *

நாங்கள் கராச்சிக்குச் செல்லும் தினத்திற்கு முந்திய நாள் சாயங்கிாலம் அவள்

என் அண்ணுவின் பெண்ணை எடுத்து வைத்துக்கொண்டு கொஞ்சிக்கொண்டிருந் தாள்

அச்சிறு குழந்தையின்மேல் அவளுக்கு அபாரமான பிரியம் உண்டாயிருந்தது. "என் செல்லம், நீ இங்கேயே இருந்து டுடீ!" என்று கூறி புன்சிரிப்புடன் அவள் குழந்தையின் கன்னத்தில் முத்த மிடவே குழந்தை சந்தோஷமுடன் சிரித் தது. பிறகு "என் கண்ணுக்கு பூப்பரிச் சுத் தரேன் வா!" என்று சொல்லி மாடி யில் புஷ்பித்திருந்த ரோஜாப் பூவைப் பறித்து குழந்தைக்குக் கொடுக்க அது சந்தோஷமாகத் தன் கைகளை ஆட்டி அதை வாங்கிப் பார்த்துச் சிரித்தது.

* * *

" அவளும் நானும் (அவள் பெயர் லக்ஷ்மி) பூனு கடை வீதிக்குச் செல்கி றோம் குதூகலமாகப் பேசிக்கொண்டே. எதிரில் ஒரு லாரி வேகமாக வருகிறது. மறு பக்கமுள்ள சந்திலிருந்து ஒரு கார். 'டபார்' என்ற சப்தம். இரண்டும் முட்டிக்கொண்டன. அவள் அதைக் கண்டு பயந்து என்னைக் கெட்டியாக பிடித்துக் கொண்டாள்!......"

நான் திடுக்கிட்டுக் கண் விழித்தேன், "என்னடா இன்னும் தூக்கம்? எழுந் திரு" என்று அண்ணு சொன்னதும் ரயில் ஆமதாபாத் ஸ்டேஷனில் வந்து சட்டென நின்றதை யறிந்தேன்! உடனே எழுந்து உட்கார்ந்தேன்!

என் மன்னியும் சித்தியும் பேசிக் கொண்டிருந்தார்கள். மன்னி சொன்னுள்: "பாவம். லக்ஷ்மி முன்னெல்லாம் எப்படி இருப்பாள் தெரியுமா? போன வருஷத்தி லிருந்து அவளுடைய சந்தோஷமே போய் விட்டது. நாங்கள் எல்லாரும் சொன்னேம். அவளை நம்ம ராமுவுக்குக் கொடுக்கணும்னு. சுப்பையாகூட ரொம்ப அதுக்கு சிரமப்பட்டான். ஆனல் அவள் அப்பா நிறைய சொத்தில்லை னு நினைச்சு அவருக்கு ஏதோ உறவில் கல்கத்தாவில் யாருக்கோ அவளைக் கலியா ணம் பண்ணிக் கொடுத்தார். சரியா ஆறு மாசமாகலே. மாப்பிள்ளை மாரடைப்பினல் 'போயிட்டார்' என்று தந்தி. வீட்டில் எல்லாரும் வருத்தப்பட்டார்கள். லக்ஷ்மி பாவம் அழுதாள். அநியாயமா அவளை கெடுத்துட்டா. இப்போ என்ன செய் யறது?"

"கொடுத்து வச்சதுதான் கிடைக்கும். அவன் எழுதின எழுத்தை மாத்த யாரால் முடியும்? அவள் விதி அப்படி இருக்கு. ரொம்ப பரிதாபம்" என்று சித்தி முடித் தாள்.

என் கண்கள் சுழன்றன. "லக்ஷ்மி விதவையா? முகத்தில் லக்ஷ்மீகரம் தாண்டவமாடும், யௌவனத்தில் எழில் பூத்து நிற்கும், அப்பெண் விதவையாகவா போய் விட்டாள்? வீட்டில் சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்த அந்த விளக்கு இப் போது அணைந்து போய் விட்டதா?

அவள் அன்று என் அண்ணுவின் குழ ந்தையிடம் காட்டிய பிரியதிற்கு ஓர் அன்னையின் அன்பும் ஈடாகுமோ? குழந்தையிடம் கொஞ்சும்போது அவள் கண்கள் பொல பொல வென்று கண்ணீ ரைச் சொரிந்ததை நான் பார்த்தேன். ஆம்! அப்போது அவள் உள்ளத்தில் எழுந்த தாயின் அன்பு அவளுடைய உணர்ச்சியைத் தூண்டி கண்ணீரை வெளிப்படுத்தியதோ? அவள் தனக்கும் இம்மாதிரிக் கொஞ்சிக் குலாவ, தன் வாழ்க்கை என்னும் வறண்ட பாலையின் நடுவே சோலைபோல் தோன்றும் ஓர் அழகிய சிறு குழந்தையில்லையே என்ற வருத்தத்தினல் கண்ணீர் விட்டாளோ? அல்லது அளவற்ற பிரியினல் பாசம் மிகுந்து ஆனந்த பாஷ்பம் சொரிந்தாளோ? அந்தக் கண்ணீருக்குள் மறைந்திருந்த ரகஸ்யம் யாருக்குத் தெரியும்?

'அவள் விதவை' என்ற சொல் என் காதுகளில் இன்னும் ஒலிக்கிறது. வாழ்க் கையின்பத்தை நுகராது, மலராத மொட் டுப்போல், உள்ள லக்ஷ்மியை நினைத்த தும் என் கண்களில் நீர் பெருகிற்று.

ஆனல் என் முகத்தை ஒருவரும் பார் த்துவிடாதபடி சட்டென்று மறைத்துக் கொண்டேன். "ஏண்டா? கண்ணிலே கரி விழுந்துவிட்டதா?" என்று கேட்டான் அண்ணு.

"ஆமாம்" என்றேன்! அவன்கேட்ட கேள்வியும் என் பதிலும் உண்மைக்கு எவ் வளவு பொருத்தமாயிருக்கின்றன?

# தபால்காரன்

(ஸ்ரீ எஸ். எல். நாராயணன் பி. ஏ.)

காலை மணி ஒன்பது இருக்கும். தபால்காரன் வழக்கம் போல் ஒரு கட்டுக் கடிதங்களுடன் தெருவில்வந்துகொண்டிருந்தான். தண்ணீருக்காகக் குழாய்க்குச் சென்ற கமலம் தெருக்கோடியில் தபால்காரனைக் கண்டதும் பரபரப்புக் கொண்டாள். அவள் பார்வையெல்லாம் அவனையே நோக்கியது. சில நிமிஷங்களில் தபால்கார மலையப்பனும் அவள் பக்கம் வந்தான். புன்முறுவலுடன், "லெட்டர் உண்டா?" என்றாள் கமலம். "நாளை நிச்சயமாகத் தருகிறேன், அம்மணி!" என்று கூறிவிட்டுச் சென்றான் மலையப்பன்! அவ்வளவு தான் அழுதகண்ணும் சிந்தின மூக்குமாய் தண்ணீர்த் தோண்டியுடன் வீட்டுக்குள் சென்றாள் கமலம்.

"ஏண்டி, கமலம்! பொழுது விடிந்ததும் அழணும்னு இருந்தயா என்ன? அப்பாவுக்குக் கச்சேரிக்குப் போகணும். பரபரன்னு காரியத்தைப்பாரு" என்றாள் பாட்டி அலமேலு.

"மலையப்பன் வந்துட்டுப்போயாச் சோல்லியோ" என்று சிறிது இழுத்துப் பேசினாள் கமலத்தின் தயார்.

"ஹூம்! அப்படியா சமாசாரம்? அந்தக் கட்டையிலே போறவனுக்கு ஒரு கடுதாசி கொடுத்தால்தான் என்ன? குழந்தை எத்தனை நாளாய்த் தவிக்கிறது? நாளைக்கு வரட்டும் அவனைச் சொல்றேன்" என்று கமலத்துக்குத் தேறுதல் கூறினாள் பாட்டி! என்ன கூறினால் என்ன? பாவம், தன் கணவனிடமிருந்து கடிதம் வராததினால் ஏற்பட்டிருக்கும் வருத்தம் கமலத்துக்குத் தானே தெரியும்?

* * *

மணியும் ஒன்பதரை ஆயிற்று. கோபாலய்யர் அவசரமாக வீட்டை நோக்கி நடந்துவந்தார். அவர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. தபால்காரனுக்காகக் காத்திருந்து அவன் ஆபீஸிலிருந்து வெளியே வந்ததும், அவன் பின்னே வழி நடந்து கடைசியாக வெறும் கையுடன் வீடு திரும்பியது அவருக்கன்றோ தெரியும்? பாவம், தன் பையனிடமிருந்து மணியார்டர் வரும் என்று எண்ணியிருந்தவர் வாயில் மண்ணைப் போட்டுவிட்டான் தபால்காரன்! ஆபீஸுக்கு நாழிகை ஆகிவிட்டதால் அவசர அவசரமாக ஸ்நான பானாதிகளை முடித்துக்கொண்டு புறப்பட்டார் அய்யர்.

"அப்பா! பள்ளிக்கூட சம்பளம்" என்றான் சின்னப் பயல் மணி. அவ்வளவு தான். பளீர் பளீர் என்று நாலைந்து அறைகள் வைத்தார் கோபாலய்யர்.

"இனிமேல் கேக்கலை அப்பா" என்று அழுதுகொண்டே ஓடினான் மணி. "சம்பளமாம் சம்பளம்! சனியன்கள், பிராணனை வாங்கறதப்பா. இதுகள் எல்லாம் இல்லைனு யார் அழுதா?" என்று சொல்லிக்கொண்டே கச்சேரிக்குச் சென்றார் அய்யர்.

* * *

கோபாலய்யர் வந்து ஒருமணி கழித்து ஆபீஸ் மானேஜர் வந்தார். வந்தவர் தன் மேஜை மீது தபால் கட்டுகளைக் கண்டார். இரண்டொன்றைப் பிரித்துப் பார்த்துவிட்டு நெற்றியின்மேல் கையை வைத்துக்கொண்டு கீழ் நோக்கியவண்ணம் இருந்தார்.

மணியும் ஒன்று அடித்தது. டிபனுக்குக் கிளம்பினால் பின் வருவது சந்தேகம் தான் என்று நினைத்துக்கொண்டு கோபாலய்யர் தம் உடைகளைச் சரிப்படுத்திக்கொண்டு மானேஜர் பக்கம் சென்றார். இரண்டு நிமிஷம் தூண் போல் நின்றார் அய்யர். மானேஜர் தலை நிமிர்ந்து பார்க்கவே இல்லை.

"ஸார், ஸார்!" என்றார் கோபாலய்யர்.

திடுக்கிட்டவர் போல் தலை நிமிர்ந்து பார்த்தார் மானேஜர்.

"நாளைக்கு ஆத்திலே சிரார்த்தம்" என்று கூறி முடிப்பதற்குள்,

"ஸரி, ஸரி, அதற்கென்ன செய்யனும் இப்போ. இப்போ நான் 'பிஸியாக' இருக்கேன்" என்று நாய் போல் விழுந்தார் மானேஜர்.

பதில் பேசாமல் தன் இடம் போய் சேர்ந்தார் அய்யர். அய்யருக்கு அன்று வேலையே ஓடவில்லை. மணியை எண்ணிக்கொண்டே இருந்தார்.

* * *

மாலை மணி 5 அடித்தது. மானேஜர் தலை மறைந்ததுதான் தாமதம், வேலைக்கார தீனன் 'எஜமான்!' என்று அழைத்துக்கொண்டே அய்யரிடம் வந்தான்.

"என்னடா சமாசாரம்?" என்று கேட்டார் கோபாலய்யர்.

"ஒண்ணும் இல்லை ஸார்! இண்ணிக்கு பூராவும், நம்ப மானேஜர் அய்யா கடுகடு இன்னு இருந்தாரு பாத்தீங்களா. நான் என்ன செய்யட்டும்? வழக்கம் போல் தபால் வாங்கி வந்தேன். எனக்கே இண்ணிக்குத் தபால் ரொம்ப அதிகம் இன்னுதான் தோணிச்சு. நான் ஒண்ணும் பேசலை ஸார். ஐயா கூப்பிட்டாங்களாம். நான் அப்போ தண்ணி குடிச்சிட்டிருந்தேன். அந்த ஐயா சொன்னதும் ஓடிப் போனேன். 'ஏண்டா, கூப்பிட்ட்வுடன் வரவில்லை' இன்னு. சொல்லி 8 அணா 'பைன்' போட்டுட்டாங்க சாமி" என்று சொல்லி கண்ணீர் பெருக்கினான் தீனன்.

"ஒத்தரைச் சொல்ல குற்றமில்லேடா" என்று தலையில் அடித்துக்கொண்டு வீட்டை நோக்கிச்சென்றார் கோபாலய்யர்.

* * *

மறுநாள் அய்யர் வீட்டில் சிரார்த்தம். மணி 9-30 இருக்கும் கோபாலய்யர் ஸ்நானம் செய்து கொண்டிருந்தார். கமலம் சமயலறையில் இருந்தாள்.

"ஸார், ஸார்!" என்று கூப்பிட்டான் மலையப்பன்.

"இந்தக் கட்டையிலே போறவனுக்கு ஒரு நாள் கிழமை கூடக் கிடையாதா? என்ன தைரியம் பாரு!" என்று முணுமுணுத்துக்கொண்டே வெளியே வந்தாள் அலமேலுப் பாட்டி.

"இந்தாங்க கடுதாசி" என்று தரையில் வைத்துவிட்டு, "ஐயாவை எங்கேயிருந்து, மணியார்டர் வந்திருக்கும்னு கேளுங்க" என்றான் மலையப்பன்.

"என்னடா, இவ்வளவு நாழிகை ஆயிடுத்தே, மலையப்பன் இன்னும் வரலையேனு இப்போதான் கமலத்திடம் சொல்லிண்டிருந்தேன். நீயும் வந்தே. உனக்கு நூறு வயசு" என்று கூறிவிட்டு, "கமலம், கமலம்" என்று அழைத்தாள் பாட்டி.

* * *

வேலையை அப்படியே நிறுத்திவிட்டு, ஓடி வந்து தன் கணவன் எழுதிய லெட்டரைப் பிரித்து படித்துக்கொண்டே சமயலறைக்குள் சென்றாள் கமலம். அவளுக்கு எவ்வளவு குதூகலம்! கணவனை நேரில் கண்டதுபோல் களித்தாள் கமலம். கோபாலய்யரும் புன்சிரிப்புடன், பணத்தை எண்ணி வாங்கிக்கொண்டு சென்றார். மலையப்பனும் அணா இரண்டைச் சட்டைப் பையில் போட்டுக்கொண்டு குதூகலத்துடன் திரும்பினான்.

* * *

சாயங்கிரம் மணி 5-30 இருக்கும். கோபாலய்யர் தன் பையன் மணியுடன் மெரினாவில் நின்றுகொண்டிருந்தார், சிறிது நேரத்தில், "ஸார், ஸார்" என்று தன்னை யாரோ கூப்பிடுவதாகத் தெரிந்து, திரும்பிப் பார்க்கவே தன் மானேஜரைக் கண்டதும் பிரமித்து நின்று விட்டார்.

"என்ன, பாருங்கோ! நேற்று எத்தனை லெட்டர் ஆன்ஸர் பண்ணவேண்டியிருக்கது. ரொம்ப நியூஸன்ஸாயிருக்கு ஸார். என்ன அக்கவுன்ட்ஸ் எல்லாம் சரியாயிருக்கோ இல்லையோ?" என்று கூறி "குட் நைட்" வைத்து விட்டுச் சென்றார்.

அன்று, மணிக்கு பக்ஷணங்களும் பழங்களும் கிடைத்தன. எல்லாம் தபால்காரன் வேலை!

# செவ்வானம்

(கோத்தமங்கலம் ஸ்ரீ சுப்பிரமணியம்)

காலைக்கிழக்கினில் தங்கநிறங்காட்டுஞ் சூரியன்—இப்போ
மேலைத்திசைவானில் ரத்தநிறங்காட்ட லேனடா?
வேலைபிறந்தவன் கண்ணாடிபோன்றவன் கேளடா—அதில்
மேலைக்களத்தையும் கீழைவனத்தையும் பாரடா!
லோபியைப்போலவே தங்கம் சுருட்டிக்கிட்டோடும்—பரிதியைப்பார்,
சோபிக்கும்வானத்து நீலத்தகட்டில் சொலிக்குமிடாவபாரம்.

## மழைக் குறி

தென்னமரத்துமேல் நுண்ணியகூந்தலில் மின்னிமினுக்குதடா
மன்னும்தவளைகள் மடைகளிற்கூடியே சன்னைபடிக்குதடா
எண்ணங்கூட இலை, வேர்வைகிளம்பி இருக்கம் புழுங்குதடா
மண்ணிலிருந்தொரு வாடைகிளம்பின மாயம் இதுவென்னடா
காதையடிக்கிது நாய்களெல்லாம் கூட்டில்காக்கை பதுங்குதடா
போதைமறைக்கிற மேகப்புடவையில் பொன்னுச் சரிகையைப்பார்!
ஏதடாஇங்கிந்த மாடு தலைதூக்கி எங்கேயோ பார்க்குதடா.
ஆதிமகாமாரி அன்புமன்னயேய ஆகுங்குறிகளடா.

## மின்னல், இடி, மேகம்

மந்தாரம்போடுது மப்புப்படருது மானமிடிக்குதடா
சிந்தூரம்போலவே சூரியனைச்சுத்திச் சிவப்புப் பரிவட்டம்பார்,
மானத்துக்குட்டையில் மீனைப்பிடிக்கவே ஏணியிருக்குதடா
சேனைப்படைகள் போலானமேகங்களைச் சோஅடுக்குதடா
ஆகாசக்கண்ணாடி அற்புதத்தைச்சொல்ல வாகுமோ என்னாலே
அட்டகஜங்களும் கெட்டைமலைகளும் அதோபார் முன்னாலே!
வெள்ளைப்பளிங்கியில் கள்ளக்கருப்புகள் மெள்ளவே ஏறுதடா
கிள்ளைபறப்பது போலப்பறந்தங்கு கீர்த்திகள் சேருதடா.
மெத்தப்படித்தபேர் புத்திக்குழப்பம்போல் கத்தை படியுதடா
சொத்தைப்பறிக்கவே முத்தந்தரும்வேசி சித்தநிறம்போலவே
கண்ணநிறம்போலோர் மேகங்கிளம்புது கண்டுமகிழ்வோமே!
திண்ணியசங்கத்தின் ஓசைமுளங்குது வெண்ணெய் திருவானே
சும்மாகிடக்கிற வானத்தகட்டைச் சுருட்டி உருட்டுதடா
அம்மாவெனச்சொல்லும் செவிடனுக்குங்காதில் ஆப்புஅடித்ததுபோல்,
வையத்திலேதவறோர் சத்தமின்றிச்செய்ய வந்தவிடிச் சத்தமாம்
துய்யவிழியுங் குருடனைப்போலத் துளாவிச்செய்யுமடா
கனன்தவடமலை கக்கும்புகையுடன் கலந்துவருந் தீயடா,
சினங்கொளுவஞ்சகர் கல்வியில்லாதவர் சிந்தைக் கருப்பிதுவாமடா
காளிமகாசத்தி கையால்சுழட்டுற கத்திஒளியிது வாமடா
மேளிபிடிப்பவன் தேவதைகைவில்லில் வாளிபரியுது பாரடா!

## மழை

காளிக்குள்ளேகூடி ஆளைமிரட்டுது கல்லமளைபெயப் போகுதடா
காளிதாசன்வாக்குப் போலப்புறப்ப டுக் கம்பன்கவிபோலப் பாயுதடா
பள்ளிச்சிறுவர்கள் துள்ளிக்குதித் தோடிப்பார்த்து மகிழ்வாரோ
உள்ளிற்கிடக்கிற காய்ச்சல்காரன்கண்டு உள்ளம் குளிர்வானே!
உப்புக்கடல்நீரைச் சப்பிக்குடிக்கிற மேகமே—உனக்
கெப்படிக் கும்பிடு போடுவதென்று சந்தேகமே!
செப்பும்வீரதத்துக்கு அமிர்தத்தைத்தந்தது போலவேநீ
உப்புக்குத்திப்புனல் எப்படித்தந்திட்டாய்—மேகமே?

# ஐந்து கடிதங்கள்

(ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஸ்ரீனிவாஸன்)

சிங்கனூர்
3-3-1938

எனதன்புள்ள சுமதிக்கு,

உன் கடிதம் கிடைத்தது. மிகவும் சந்தோஷமடைந்தேன். உனக்கு சென்னையில் இருந்து இருந்து மிகவும் அலுத்துப் போயிருக்கிறதென்று எழுதியிருக்கிறாய். இந்தத் தடவை கோடை விடுமுறைக்கு மாமா நீலகிரிக்குப் போகும் யோசனையும் இல்லை என்று எழுதி இருக்கிறாய். நீங்கள் எல்லோரும் எங்கள் ஊருக்கு வந்து எங்களுடன் வேடிக்கையாக விடுமுறையைக்கழிக்கப்படாதாஎன்று அம்மா எழுதிக் கேட்கச்சொன்னார். எங்களூர் பட்டிக்காடு தான். பட்டிக்காட்டிற்கு நான் அழைக்கிறேனென்று நீ சிரிக்கலாம். ஆனால் கிராமத்திலிருக்கும் அமைதியும், ஆரோக்கியமும் பட்டண வாசத்தில் நூறில் ஒரு பங்கு கூடக் கிடைப்பதரிது. இயற்கை அன்னையின் தோற்றமும், ஆற்றின் கண்ணாடி போன்ற தெளிந்த ஜலமும், எங்கும்அன்பும் குடிகொண்டிருக்கும் ஆனந்தமும் உங்களுக்குக் குதூகலத்தைக் கொடுக்குமென்று நம்புகிறேன். இவ்விடத்தில் ஒருமாத காலம் இருந்த மாத்திரத்தில் புது மனிதர்கள் ஆகிவிடுவீர்கள்! சுமதி, நாம் சிறு குழந்தைகளாக இருந்தபொழுது நீயும், மாமா, மாமியும் ஒரு தடவை இவ்விடம் வந்திருந்தீர்களே, அப்பொழுது நாம் காவிரி ஆற்றின் கரையிலும், தென்னந்தோப்பிலும் ஓடி விளையாடினதெல்லாம் உனக்கு நினைவு இருக்கிறதா? ராஜண்ணா நம்மிருவருக்கும் மரம் ஏறி மாங்காய் பறித்துத் தந்ததும், அவன் சொக்காய் ஜேபிலிருந்து கத்தியும், உப்பு மிளகாய் பொடியும் எடுக்க, நாம் மூவரும் ஆற்றின் கரையோரத்து மணலில் உட்கார்ந்துக்கொண்டு உல்லாசமாகச் சாப்பிட்டதை நினைக்க இப்பொழுது நாக்கில் ஜலம் ஊறுகிறது. செழிப்பாக வளர்ந்து வாழைக்குலைகளைத் தாங்கமாட்டாது தேவமாதைப் போல் அசைந்தாடும் வாழை மரங்களுக்கிடையிலும், தென்னந்தோப்புகளிலும் நாம் எவ்வளவு ஆனந்தமாக ஓடி விளையாடுவோம்? அந்த மாதிரியான சந்தோஷ நாள் திரும்பவும் கிடைக்குமா?

அம்மாவும் அப்பாவும் உங்களைப் போன்ற நாகரிக மனுஷ்யர்களை இந்தப் பட்டிக்காட்டிற்கு அழைப்பதற்கே மிகவும் சங்கோஜப்படுகிறார்கள். அல்லாமல் நீங்கள் என்ன நினைத்துக் கொள்வீர்களோ என்று பயப்படுகிறார்கள். ஆகையால் அவர்கள் சார்பாக நானே கடிதம் எழுதி இருப்பதாக மாமா, மாமிக்குச் சொல். அவர்களுக்கு என் நமஸ்காரங்களைத் தெரிவிக்கவும். ராஜண்ணா வார்தாவிற்கு சென்றிருக்கிறான்.

இப்படிக்கு உன் அன்பார்ந்த பதிலை எதிர்பார்க்கும்

அருமை அத்தங்காள்
காமாக்ஷி

* * *

சென்னை
7-3-1938

என் பிரியமுள்ள காமாக்ஷிக்கு,

உன்னுடைய அன்பு ததும்பும் கடிதத்தைப் படித்து அதிக ஆனந்தமடைந்தேன். உடனே அம்மா அப்பாவிற்கு உன் கடிதத்தை வாசித்துக் காண்பித்தேன். அப்பாவும், "விசாலம், இதுவும் ஒரு நல்ல யோசனை தான் போலிருக்கே! டாக்டர் உன் உடம்பிற்கு சில நாட்கள் கிராம வாசம் அவசியம் என்று ரொம்ப நாட்களாகச் சொல்கிறார். அக்காவிற்கு நாம் சிங்கனூருக்கு வருகிறதில்லை என்று ரொம்பக் கோபம் தான். குழந்தை இஷ்டப்பட்டால் இருவருமாகப் போய் அக்காவின் அகத்தில் கொஞ்ச நாள் இருந்துவிட்டு வாருங்களேன்" என்றார். அதைக் கேட்டு அம்மாவிற்கும் மிகவும் சந்தோஷமாயிற்று. ஆகையால் நானும் அம்மாவும் வர ஞாயிறன்று காலை புறப்பட்டு சிங்கனூர் வந்து சேருகிறோம். இந்த தடவை எப். ஏ. பாஸ் ஆனால் பி. ஏ ஆனர்ஸ். சேரலாமென்றிருக்கிறேன்.

அத்தான் இவ்விதம் பைத்தியக்காரத்தனமாக நடந்துக்கொள்வாரென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. எம். ஏ. எல். டி பாஸ் செய்தவர் ஓர் நல்ல உத்தியோகத்தில் அமராமல் கிராமசேவை என்றும் வார்தா ஆஸ்ரமம்' என்றும் அலைவதைப் பார்க்க எனக்கு கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை.

காமாக்ஷி! ஒரு ரகஸியம்! அப்பா எனக்கு ஒரு ஐ. ஸி. எஸ். மாப்பிள்ளை நிச்சயித்திருக்கிறார். ஆனால் எனக்கு இப்பொழுது கலியாணம் செய்துகொள்வதில் இஷ்டமில்லை,

கலியாணத்தைச் செய்துகொண்டு சுதந்திரமின்றி வாழ்வதில் எனக்குக் கொஞ்சமும் பிரியமில்லை. சிங்கனூருக்குப் புறப்பட்டாலாவது அப்பா இந்தக் கலியாண யோசனையைத் தள்ளி வைத்துவிடமாட்டாரா என்று நினைக்கிறேன்.

மற்ற விஷயம் நேரில்,
இப்படிக்கு அன்புள்ள அம்மங்காள்,
சுமதி.

* * *

சென்னை
11-4-38

அத்திம்பேருக்கு சுந்தரம் அநேக நமஸ்காரங்கள். உபயக்ஷேமோபரி. இதுவரைக்கும் நான் சுமதியை ராஜாராமனுக்குக் கேட்கவில்லை என்று உங்களுக்கும், அக்காவிற்கும் கோபம் இருந்தாலும் இருக்கலாம். ஆனால் இதுவரைக்கும் நமது குடும்பத்தில் சொந்தத்திற்குள் கொடுத்து விவாகம் செய்யும் வழக்கமிருக்கவில்லை யாதலால்தான் நான் சுமதிக்கு வெளியே வரன்தேடிய காரணம். ஆதலால் நீங்களிருவரும் வேறு விதமாக நினைக்கலாகாது. சுமதியும், விசாலமும் சிங்கனூர் போய் வந்தவுடன் கலியாண ஏற்பாடு நடத்தலாமென்றிருந்தேன். மற்றும் பையனுக்கு வைகாசியில்தான் லீவு கிடைக்குமென்றதால் கலியாணத்தை ஒத்திபோட நேரிட்டது. ஆனால் சுமதி சிங்கனூரிலிருந்து வந்தபின் முற்றிலும் மாறிப்போய்விட்டாள். கதர் ஆடை என்ன, சேர்வகுடு என்ன, சதா கிராமாபிவிருத்தியின் பேச்சென்ன! அவள் முதல்முதல் கலியாணமே செய்துகொள்வதில்லை என்றும், இனி தான் ஆயுள்பரியந்தம் கிராமசேவையில் ஈடுபட்டு உழைக்க உத்தேசித்திருப்பதாகவும் பிடிவாதமாகக் கூறினாள். அப்புறம் பலவாறாக அவளது உண்மையான இஷ்டத்தை விவரித்துக் கூறவேண்டுமென்று கேட்டுக்கொண்டபிறகு, "கலியாணம் செய்துகொண்டால் அத்தானைத் தவிர்த்து வேறொருவரையும் மணந்து கொள்ளமாட்டேன்" என்று கூறிவிட்டாள். தயவுசெய்து தாங்களும் அக்காவுமாக யோஜித்து ராஜராமன் சம்மதத்தையும்கேட்டு கடிதமெழுத வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். நானும் ஒருவாரத்தில் சிங்கனூர் வருகிறேன். அக்காவிற்கு என் நமஸ்காரமும் குழந்தைகளுக்கு என் ஆசிர்வாதமும்.

இப்படிக்கு தங்கள் பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கும்,

பணிவுள்ள மைத்துனன்,
சுந்தரராஜன்

சிங்கனூர்
14-4-38

பிரியமுள்ள சுந்தரத்திற்கு அத்திம்பேர் அநேக ஆசிர்வாதங்கள். உபய குசலோபரி. இப்பவும் உன் கடிதம் கிடைத்தது. மிகவும் சந்தோஷம். கைக்குக்கிடைத்த பாக்கியலக்ஷ்மியை அந்தப் பெண் இவ்விதம் உதறித் தள்ளுமென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. எல்லாம் கடவுளின் திருவிளையாடல்! எங்கள் ராஜப்பாவின் புண்ணியம்! சுமதி சிங்கனூர் வந்து ஒருவாரத்திற்குள் ராஜப்பாவும் ஒரு மாதத்தில் வருபவன் காரியம் முடிந்து திரும்பியதும் தெய்வச் செயலே அல்லவா? அவனுடன் காமாக்ஷியும் சுமதியும் பொழுதுபோக்காகக் கிராமத் தொண்டில் ஈடுபட்டு வந்தனர். நம் கிராமத்தின் பாக்கியம்தானோ என்னமோ, இரண்டு வாரங்களில் சுமதி முற்றிலும் புதுமனுஷியாக மாறிவிட்டாள். கதர் ஆடை உடுப்பதும், ஹரிஜன சேரிகளுக்குச் சென்று அவர்கள் சுகதுக்கங்களை விசாரித்து, அவர்களுக்குச் சுகாதார முறையைக் கற்பிக்கவும் ஆரம்பித்தாள். இதுபோல் எவ்வளவோ வேலைகளைச் சுறுசுறுப்புடன் செய்ய ஆரம்பித்தாள். "இனிமேல் படிப்பை நிறுத்திவிட்டு கிராம சேவையில் ஈடுபட்டு உழைக்கப்போகிறேன்" என்று சொல்வாள். இவ்விதம் வேடிக்கைக்காகச் சொல்கிறாள் என்று நம்பி இருந்தோம். இப்பொழுது சுமதியின் உயரிய நோக்கத்தையும், தியாக புத்தியையும், கருணைக் கடலாகிய மனதையும் அறிந்து புளகாங்கிதமடைந்தேன். இவ்விதப் பெண் இருக்கும்போது எனக்கு என்ன குறை? கலியாண முகூர்த்தம் உனக்கு உசிதமென்று தோன்றும் தினமே எங்களுக்கும் உசிதம். உன் மருமான் சம்மதத்தைக் கேட்கவும் வேண்டுமோ! அந்த விஷயத்தை கடித சிரமமில்லாமலேயே நீ சுமதியைக் கேட்டே அறிந்திருக்கலாமே! குழந்தைகளிருவரும் மணந்துகொண்டு நம் தேசத் தொண்டில் கீர்த்தியும், பயனுமடைந்து நீடூழிகாலம் சுகமாக வாழட்டுமென்று நானும் உன் தமக்கையும் கருணாநிதியைப் பிரார்த்திக்கிறோம்.

இப்படிக்கு,
உனதன்புள்ள அத்திம்பேர்,
வேங்கடராமன்

* * *

சிங்கனூர்
17-2-39

எனதன்புள்ள அம்மாவுக்கு அநேக கோடி நமஸ்காரங்கள். இப்பவும் உன் அன்புததும்பும்

கடிதத்தைக்கண்டு களிப்புற்றேன். நீ ஏன் என்னைப்பற்றி வீண் கவலைப்படுகிறாய்? நீ அநியாயமாக ஐ. வி. எஸ் மாப்பிள்ளை வராமல் போனானே என்று இன்னும் வருந்துகிறாயென்று தெரிகிறது. அப்படியொன்றும் வீண் கவலைப்பட வேண்டிய அவச்யமே இல்லை. நான் ஜம்மென்று ராணியாட்டமா சுகமாக இருக்கிறேன்!

மத்தியானப் பொழுதை எப்படி கழிக்கிறேன் என்று கேட்டிருக்கிறாய். சாயங்காலம் டென்னிஸ் ஆடாமல் ஆரோக்கியம் கெட்டுவிட்டிருக்கும் என்று எழுதியிருக்கிறாய். இவ்விடம் வந்தபின் இன்னும் நன்றாகத்தான் இருக்கிறேன். மத்தியானப் பொழுதில் ராட்டை நூற்கிறேன். அரிய நூல்களையும் பத்திரிகைகளையும் படிக்கிறேன். அப்பவே நான் நூற்ற நூலினால் அத்தானுக்கு இரண்டு ஜதை வேஷ்டிகள், டவல்கள், அத்தைக்கு ரவிக்கைத் துண்டுகள், எனக்கு ஒருபுடவை எல்லாம் நெய்தாகிவிட்டது. மூன்று மணியிலிருந்து ஐந்துமணி வரைக்கும் வீட்டுக்கு முன்புறமிருக்கும் திண்ணையில் குடியானப் பெண்களைக் கூட்டித் திண்ணைப் பள்ளிக்கூடம் ஒன்று நடத்துகிறேன். சிறுமிகளுக்குச் சங்கீதம், பாடம், சித்திரம் வரைவது, தையல் வேலை, நன்னடக்கை முதலிய விஷயங்களைக் கற்பிக்கிறேன். ராட்டை வகுப்பு ஒன்றும் நடத்துகிறேன். அந்த வகுப்பிற்காக அத்திம்பேர் பத்து ராட்டைகளை வாங்கி உதவியிருக்கிறார். சாயங்கால வேளையில் நான் அத்தான், காமாக்ஷி எல்லோருமாகச் சேர்ந்து கொல்லையில் இருக்கும் தோட்டத்தில் உல்லாசமாக வேலை செய்கிறோம். இரவு நேரத்தில் அத்தானிடம் ஹிந்தி கற்றுக்கொள்ளுகிறேன். வரும் மாதம் "பிராதமிக்" பரீக்ஷைக்குப் பணம் கட்டப்போகிறேன். மற்ற நேரத்தில் அத்தைக்கு உதவியாக என்னாலான வீட்டு வேலைகளைச் செய்து வருகிறேன்.

வாரத்தில் இரண்டுதடவை அத்தானும் நானுமாக ஹரிஜனச் சேரிக்குச் சென்று அவர்களுக்கு எங்களால் இயன்ற உதவியைச் செய்து, சுகாதாரக் குறைகளை எடுத்துக் கூறி வருகிறோம். பாவம்! அத்தானுக்கு விடியற்காலையிலிருந்து பாதிராத்திரிவரைக்கும் கிராம சீர்திருத்தவேலையே சரியாக இருக்கிறது. இந்த ஐந்தாறு மாதங்களில் சிங்கனூர் எவ்வளவு மாறிவிட்டது தெரியுமா? நீ வந்தால் இந்த ஊர் அடையாளமே தெரியாது. போதாததற்கு அத்தான் ஹிந்தி போதனா பாடசாலையையும் கைத்தொழிற் பாடசாலை ஒன்றும் ஸ்தாபித்து நடத்திவருகிறார். இதைச் சுற்றுப்பக்கக் கிராமங்களிலிருந்து பலர் வந்து கல்வி கற்றுக்கொண்டு போகிறார்கள். கூட்டுறவு சங்கம் முதலிய பல ஸ்தாபனங்களையும் ஆரம்பித்திருக்கிறார். இனிமேல் கிராமம் கிராமமாகச் சுற்றிப் பிரசாரம் செய்யவேண்டுமென்று அத்தானுக்கு சர்க்காரிலிருந்து ஓர் வேண்டுகோளும் வந்திருக்கிறது. அவருடைய பாடசாலைக்கு மாதம் 50 ரூ. மான்யமும் என்னுடைய பாடசாலைக்கு மாதம் 20 ரூ. மான்யமும் சர்க்கார் அளிப்பதாக அறிக்கை வந்திருக்கிறது. காமாக்ஷியும் நானும் இணைபிரியாத சிநேகிதிகளாக இருக்கிறோம். அவள் என் வேலைக்கு மிகவும் சகாயமாகயிருந்து உதவுகிறாள். அப்பா சௌக்கியமாக இருக்கிறாரா? அவருக்கு என் சாஷ்டாங்க நமஸ்காரங்களைத் தெரியப்படுத்தவும். என்னைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். நான் ஆனந்தமாய் இருக்கும்போது நீ ஏன் கவலைப்படவேண்டும்?

இப்படிக்கு,
பணிவுள்ள பெண்,
சுமதி






# காதலின் வெற்றி

(ஸ்ரீ. கே. எஸ். நரசிம்மாச்சாரி, பி. ஏ.)

வனப்பும் வளமையும் வாய்ந்த ஓர் நாட்டில் சாபினஸ் என்ற ஒரு வாலிபன் வசித்து வந்தான். அவன் எம்மங்கையின் உள்ளத்தையும் கவரும் அழகும் ஆண்மையும் படைத்தவன். நாளடைவில் அவன் தன் காதலை ஒலிந்தா என்னும் ரூபவதியின் மீது செலுத்தினான். செல்வத்தில் அவள் அவனுக்குக் கீழ்ப்பட்டவளேனும், அழகிலும் குணத்திலும் அவனை ஒத்தவளே. அவளும் அவனையே விரும்ப, சுபமே இருவருக்கும் மணம் முடிந்தது.

ஒருவர் எவ்வளவு அதிர்ஷ்டசாலியாயினும் பிறருடைய பொறாமைக்கு ஆளானால் அதைத் தப்புவது அரிது. பொறாமை என்னும் தீயை வழி காட்டியாயுள்ளவர்கள் குருடர்களாக அல்லவோ ஆகிவிடுகின்றனர்! ஒரியானா என்னும் புகழுதற்குரிய குணங்கள் வாய்த்த மாது சாபினஸைக் காதலித்து வந்தாள். அவன் வேறொருவளை மணந்தான் என்றறிந்ததும் அவன் மேல் அடங்காக் கோபமும் பொறாமையும் கொண்டாள். இப் பொறாமை விஷமானது நாளடைவில் அவள் ஹிருதயத்தை அரித்து அவள் மனதையும் சீர்கெடுத்துவிட்டது. பிறர் இன்பம் இவளுக்கு நஞ்சாய்ப்பட்டது. சாபினஸ் மேல் எப்படியாவது பழிவாங்க வேண்டுமென்று தீர்மானித்துவிட்டாள். அவனையும் ஒலிந்தாவையும் பிரித்துத் துன்புறச் செய்ய மார்க்கம் தேடினாள். என்னே இவள் மனத்தின் மாறுதல்!

விதியும் அவள் குரூர எண்ணத்தை ஆதரிக்கலுற்றது. சாபினஸ் ஒரு நியாய வழக்கில் அகப்பட்டுத் தன் சொத்தெல்லாம் இழந்தான். வறுமையால் பீடிக்கப்பட்டு ஒரியானாவின் உதவியை நாடினான். அவளும் தனக்கு நல்ல சமயம் வாய்த்ததென்று, முதலில் ஒலிந்தாவைவிட்டுப் பிரிந்தாலொழிய அவனுக்கு உதவி செய்ய முடியாதென்று மறுத்தாள். அவ்விதம் செய்தால் தன் ஐசுவரியம் முழுவதையுமே அவனுக்குக் கொடுத்துவிடுவதாக வாக்களித்தாள். இதைக் கேட்டதும் சாபினஸ் திகைப்புற்றான். ஒலிந்தாவிடம் இருந்த அளவற்ற காதலினால் ஒரியானாவின் ஈகையை வெறுப்புடன் மறுத்தான். ஒரியானாவின் பொறாமை முன்னிலும் பன்மடங்கு அதிகமாயிற்று.

பட்ட காலிலேபடும் என்றதற்கிணங்க, சாபினஸ், அவனுடைய குடும்பத்தின் பழைய கடன் ஒன்றுக்காகச் சிறைச்சாலைக்கனுப்பப்பட்டான். சிறையில் ஒலிந்தாவே ஓர் ஆறுதலாய் இருந்து வந்தாள். ஒருவருக்கு மற்றவரிடத்தில் இருந்த

# சாரீரம்

(ஸ்ரீ ஆர். கே. விசுவனாதன். எம். ஏ.)

காலஞ்சென்ற புஷ்பவனம், கிட்டப்பா இவர்களுடைய பாட்டைக்கேட்டு முன் ஜன்மத்தில் எத்தகைய புண்ணியம் செய்ததின் பயனாக இவ்வளவு அருமையான சாரீரத்தைப் பெற்றார்களோ என்று ஜனங்கள் வியப்படைவதுண்டு. மற்றும் சிலர் இவர்கள் முன்பிறப்பில் ஈசுவரனுக்குத் தேன் அபிஷேகம் செய்திருக்க வேண்டுமென்றும் நினைப்பதுண்டு. ஒருவன் எவ்வளவு சங்கீத ஞானம் பெற்றிருப்பினும் அவனுக்குச் சாரீரம் நன்றாக இல்லாவிடில் பிறருக்குப் பூரண திருப்தி அளிக்கமுடியாமல் தவிக்கின்றதை நாம் அறிவோம். இனிமையான சாரீரத்தைப் பெறுவது முற்றிலும் நம் வசத்திலில்லா விட்டாலும் அதைப் பயிற்சியினால் ஓரளவு நன்றாகத் திருத்திக் கொள்ளலாம். வட நாட்டில் சங்கீதம் கற்குமுன் சாரீரத்தை நன்கு வளர்த்து வருகின்றார்கள். அதன் பொருட்டு அந்நாட்டுப் பாடகர்களின் குரல் இனிமையை அடைந்திருப்பதை அவர்கள் சங்கீதத்தைக் கேட்ட யாவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். தென்னிந்தியாவில் வாய்ப்பாட்டிற்கு எல்லாவற்றைக் காட்டிலும் சாரீரம் முக்கியமானது என்பதை மறந்து விடுகிறோம். தற்காலம் நம்மிடையில் உள்ள பிரபல சங்கீத வித்வான்களில் சிலரே சாரீர சுகம் பெற்றிருப்பதை அறிவோம். வாய்ப் பாட்டு பயின்று வருபவர்கள் சாரீரத்தின் அவசியத்தை உணர்ந்து அதை நன்கு வளர்த்து வர வேண்டியது அவர்களின் கடமையாகும். சாரீரம் இல்லாதவர்கள் வாய்ப்பாட்டு அப்பியாசம் செய்வதில் பயனில்லை. அவர்களுக்குச் சங்கீத உணர்ச்சி நன்றாக இருக்குமானால் வாத்தியங்களைக் கற்று அவர்களுடைய திறமையை வெளிப்படுத்துவதே நலம். பாடகர்களைப்போல பொதுக்கூட்டங்களில் பேசுபவர்களும் குரலை நன்கு வளர்க்கவேண்டிய அவசியத்தை அறியலாம். இதை நன்குணர்ந்த தமிழ்நாட்டுத் தலைவர் ஒருவர் "கடற்கரையில் சிங்கம்போல் கர்ஜிப்பேன். ஐரோப்பிய சங்கத்தில் கிளிபோல் கொஞ்சுவேன்" என்று சொன்னது ஞாபகமிருக்கலாம்.

பாடகர்கள் அனைவரும் முதலில் சரீரத்திற் சென்று உள்ள உறுப்பை அறிய வேண்டும். கிராமபோனில் புனல் வாயினடியில் "ஸவுண்டு பாக்ஸ்" இருப்பதைப்போல மனிதனது தொண்டையில் லாரிங்ஸ் (Larynx) என்று சொல்லப்படும் பேசும் பெட்டி அமைந்திருக்கிறது. இது வாய்க்குள் சுவாசப்பைக்குச் செல்லும் காற்றுக் குழாயின்மேல் பாகமாக அமைந்துள்ளது. ஆகையினால் நாம் சுவாசிக்கும் காற்று இதன் மூலமாகத்தான் சுவாசப்பைக்குச் செல்லவோ அல்லது அதிலிருந்து வெளிவரவோ வேண்டும். இதன் அமைப்பு ஒரு முக்கோண வடிவமாக இருக்கும். அம் முக்கோணத்தின் ஒரு மூனை வெளியில் சிலருக்கு நன்றாக நீட்டிக்கொண்டிருப்பதை அவர்களின் கழுத்தை நோக்கத் தெரியவரும். இதைக் குரல்வளை என்று சொல்லுவது வழக்கம். ஆங்கிலத்தில் இதை (Adam's apple) என்று சொல்லுவார்கள். மேற் சொன்ன பேசும் பெட்டியினுள் தொண்டை நாண்கள் (vocal cards) என்ற இரண்டு பிருவான சன்னத் தோல்கள் இருக்கின்றன. இவை பக்க வாட்டத்தில் தசைகளினால் இழுக்கப்பட்டு காற்றுக் குழாயின் துவாரத்தைக் கதவுகள்போல மூடிக்கொண்டிருக்கின்றன. இவைகளின் உதவியால் தொண்டை நாண்களை வேண்டுமென்றபடி கட்டுப்படுத்த முடியும். லாரின்ஜாஸ்கோப் (Laryngoscope) என்ற ஒரு கருவியைக் கொண்டு இந் நாண்களின் அமைப்பையும், அது சுவாசிக்கும்பொழுது இருக்கும் மாதிரியையும் அறிந்தார்கள். இவைகளுக்கு இடையே ஏற்படுகிற சந்தை குரல்வளைவாய் (Glottis) என்று சொல்லுவதுண்டு. நாம் பேசாமல் இருக்கும்பொழுது இச்சந்து V வடிவமாக இருக்கும். அதன் மூனை முன்னுக்கு வந்திருக்கும். நாம் பேச யத்தனிக்கும்பொழுது அச்சந்து சிறியதாகி விடும். நாம் ஆகாரம் உட்கொள்ளும்போது அது தவறிக் காற்றுக் குழாயின் வழியாகச் செல்ல முயன்றால் உடனே மூச்சுத் திணறுவதை எல்லோரும் அனுபவித்திருக்கலாம். ஏனெனில் அப்பொழுது தொண்டை நாண்கள் நன்றாக நெருங்கி வந்து காற்று விடுவதற்குச் சிறிதும் வழிவிடாமல் மூடிக்கொண்டு விடுகிறது. உடனே மூச்சுத் திணறுதல் உண்டாகிறது.

இனி ஒரு சங்கீத வாத்தியத்திற்கு முக்கியமாய் இருக்கவேண்டிய பாகங்களையும், அவைகள் நம்முடைய சாரீரத்தைப் பொறுத்தவரையில் அமைந்திருக்கும் விதத்தையும்

பார்ப்போம். வாத்தியங்களில் அநேக விதங்களிருக்கின்றன. அவைகளை ஆராயுங்கால் அவைகளில் சில முக்கிய உறுப்புகள் இன்றியமையாததாக இருக்க வேண்டுவதை அறியலாம். முதலில் ஒலியை எழுப்புவதற்கு எல்லா வாத்தியங்களிலும் ஒரு சாதனம் இருப்பதைப் பார்க்கலாம். உதாரணமாகக் கம்பிகளின் அசைவை ஆதாரமாகக் கொண்ட வீணை, பிடில், தம்பூரா வாத்தியங்களையும் காற்றின் அசைவை ஆதாரமாகக் கொண்ட புல்லாங்குழல் போன்ற வாத்தியங்களையும், ரீடுகளின் அசைவை ஆதாரமாகக் கொண்ட நாகசுரம், ஹார்மோனியம் முதலிய வாத்தியங்களையும், மற்றும் தோல்களின் அசைவை ஆதாரமாகக் கொண்ட கஞ்சிரா மிருதங்கம் போன்ற வாத்தியங்களையும் எல்லோரும் அறிவார்கள். அவ்வாறு ஏற்படும் ஒலியை அதிகப்படுத்திக் கொடுக்க ஒவ்வொரு வாத்தியத்திலும் ஒரு சாதனம் இருப்பதையும் அறியலாம். உதாரணமாக வீணையிலிருந்து வரும் சப்தத்தை அதன் குடம், தண்டி முதலிய பாகங்கள் பெருக்கி அனுப்புகின்றன. கடைசியாக மேளகர்த்தாக்களின்படி ஸ்வரங்களை வாசிப்பதற்குண்டான சாதனத்தை வாத்தியங்களில் கவனிக்கவேண்டும். உதாரணமாக வீணையில் மெட்டுகள் என்று சொல்லப்படும் சிறு உலோகத் துண்டுகளைத் தண்டியின் மேல் பொருத்தி வைத்திருப்பதை எல்லோரும் பார்த்திருக்கலாம். கம்பிகளை வலது கை விரல்களின் நகங்களைக் கொண்டு மீட்டி இடது கை விரல்களினால் மெட்டுகளின் மேல் செல்லும் கம்பிகளை அமுக்கித் தேய்த்து மேளக் கர்த்தாக்களின்படி ஸ்வரங்கள் வாசிக்கப்படுகின்றன. இவ்வாறாக ஒவ்வொரு வாத்தியத்திலும் ஒலியெழுப்புவதற்கு ஒரு துடிக்கும் பொருளும், ஒலியைப் பெருக்குவதற்கு ஒரு சாதனமும், மேளங்களின்படி ஸ்வரங்களை வாசிப்பதற்கு மற்றொரு சாதனமும் அமைந்திருக்க மேண்டுவதன் அவசியத்தை இப்பொழுது அறியலாம்.

நாம் பேசவோ அல்லது பாடவோ யத்தனிக்கும் பொழுது தொண்டை நாண்கள் நெருங்கிவர இடையில் சந்து ஒன்று ஏற்படுகிறது. அப்பொழுது சுவாசப்பையிலிருந்து வெளிவரும் காற்று அவைகளை அசைக்க அதனால் சப்தம் உண்டாகிறது. அதாவது சுவாசப்பை துருத்தியைப் போலக் காற்றை அனுப்புவதால் அக்காற்று தொண்டை நாண்களை விடாமல் அசையச் செய்து சப்தத்தை உண்டு பண்ணுகிறது என்பது தான் கருத்து. பிற்பாடு அவ்வாறு ஏற்பட்ட அசைவு தொண்டை, வாய், மூக்கு முதலான இடங்களில் உள்ள காற்றினால் பலப்படுத்தப்பட்டு வெளிக்காற்றில் ஒலியாகப் பரவுகிறது. அவ்வாறு வெளிவரும் சப்தத்தின் முழக்கம் உள்ளிருந்து நாண்களின்மீது மோதும் காற்றின் வலுவைப் பொறுத்திருக்கிறது. அதிர்ச்சியளவோ நாண்களின் நெகிழ்ச்சியையும், பிகுவையும் பொறுத்தது. இப்பொழுது நமது பேசும் பெட்டியை வாத்தியங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க தொண்டை நாண்கள் துடிக்கும் வஸ்துக்களாகவும், வாய், மூக்கு முதலிய பாகங்கள் ஒலியைப் பெருக்குவதற்குண்டான சாதனமாகவும் இருப்பதை அறியலாம். ஸ்வரங்கள் உச்சரிக்கும் விஷயத்தில் சிலர் இதைக் கம்பி வாத்தியமாகவும், மற்றும் சிலர் ரீடு வாத்தியமாகவும் கருதுகின்றார்கள். அதாவது தொண்டை நாண்களை வீணை, பிடில் கம்பிகளைப்போல நம்மிஷ்டப்படி தசைகளின் உதவியினால் அசையும் நீளத்திலும், பிகுவிலும் முறையாக மாற்றுவதால் வேண்டுமென்றபடி ஸ்வரங்களை உச்சரிக்க முடிகின்றது என்று அபிப்பிராயப்படுகிறார்கள். மற்றும் சிலர் நாகசுரம், ஓபோ, முதலிய இரட்டை ரீடு வாத்தியங்களுடன் ஒப்பிட்டு அதுபோல இவ்விடமும் பல சுருதிகளில் ஒலியெழுப்ப முடிகின்றது என்று நினைக்கிறார்கள். நவீன ஆராய்ச்சிக்காரர்கள் தொண்டை நாண்களின் வழியாகக் காற்று வெளிவரும்போது அதில் சுழிகள் ஏற்பட்டு அதன் பொருட்டுச் சப்தம் உண்டாவதாகக் கருதுகிறார்கள். இதற்குத் தந்தி மரங்களின் அடியில் கேட்கும் சப்தத்தைச் சான்றாகக் கூறுகிறார்கள். முடிவாகப் பார்க்கையில் கம்பி வாத்தியம், ரீடு வாத்தியம் ஆகிய இரண்டு உபமானங்களும் பொருந்தும் என்று சொல்லவேண்டும்.

சிறுவயதில் தொண்டை நாண்கள் சிறியதாகவும், மெல்லியதாகவும் இருப்பதால் சாரீரத்தின் சுருதி அதிகமாக விருக்கிறது. ஒவ்வொருவனுக்கும் சுமார் 17, 18, வயதில் தொண்டை ‘உடைகிறது’ என்று சொல்லுவதைக் கேட்டிருப்பீர்கள். அதன் கருத்து என்னவென்றால் ஒவ்வொருவனும் இளமைப் பருவத்தை அடையும்பொழுது அவனுடைய அங்கங்கள் எல்லாம் முதிர்ந்து அவன் மனிதனாக ஆகிறான். அதை யொட்டி அவன் தொண்டை நாண்களும் பருமனும், நீட்சியும் அடைகின்றன. அதனால் அவனுடைய இயற்கைச் சுருதி குறைகின்றது. அதைத்தான் தொண்டை உடைகிறது என்று சொல்லுவது வழக்கம். ஸ்திரீகளுக்கு இயற்கையாகத் தொண்டை நாண்கள் புருஷர்களுக்கு இருப்

பதைக்காட்டிலும் மெல்லியதாக அமைந்திருப்பதால் அவர்களின் சுருதி புருஷர்களைவிட அதிகமாக விருக்கின்றது. மேலும் புருஷர்களின் நாண்கள் ஸ்திரீகளின் நாண்களைவிட நீளத்தில் சுமார் ஒன்றரை மடங்குகூட இருப்பதால் ஸ்திரீகளின் சுருதி புருஷர்களின் சுருதியைக் காட்டிலும் அதிகமாக இருக்கின்றது. பொதுவாக ஒருவருக்கு மூன்றரை ஸ்தாயிவரையில் சாரீரம் பேசுவது சாத்தியமானாலும், வெகு சிலரே இரண்டு ஸ்தாயிக்கு மேல் பாடுகிறதை நாம் அறியலாம். மேனாட்டார் சாரீரங்களின் ஆரம்ப சுருதிக்கும், ஸ்தாயி எல்லைக்கும் தகுந்தவாறு Bass, Baritone, Alto, Tenor, என்ற பாகுபாடுகளை அமைத்திருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் கீழ் ஸ்தாயியில் பாடும்போது அவர் மார்பிலிருந்து சப்தம் வெளிவருவதாக உணர்ச்சி ஏற்படும். அப்பொழுது Laryngoscope என்ற கருவியினால் பரீக்ஷைசெய்து பார்க்கையில் நாண்களினிடையே அதன் நீளம் பூராவிற்கும் சந்து ஏற்பட்டு அசைவதைக் கண்டார்கள். மார்பின் மேல் பாகத்தில் உள்ள காற்றிலும் ஒலி பரவி பக்கங்களில் மோதுவதால் நமக்கு இந்த உணர்ச்சி உண்டாகிறது என்று அறியப்பட்டது. மேல் ஸ்தாயியில் பாடும்போது தலையிலிருந்து சப்தம் வெளியே போவதுபோல உணர்ச்சி உண்டாகிறது. இப்பொழுது சோதனைசெய்து பார்த்ததில் நுனியில் மட்டும் சந்து ஏற்படுமாறு நாண்கள் நன்றாக நெருங்கி அசைந்து சப்தத்தை உண்டுபண்ணுவதைக் கண்டார்கள். இந்த இரண்டு ஸ்தாயிக்கும் நடுவில் துண்டு ஒன்று விழுவதுண்டு. பழக்கத்தால் ஒவ்வொருவரும் அதை மூடிக்கொண்டுபோவது வழக்கம். நாம் குசுகுசு என்று பேசும்போது நாண்கள் அசைவது கிடையாது. அச்சப்தம் உதடுகளின் அசைவினால் ஏற்படுகிறது.

ஒரே சுருதியும், முழக்கமும் கொண்ட பல ஒலிகள் பலவேறு வாத்தியங்களிலிருந்து தோன்றும்போது அவற்றை வேறுபடுத்தி அறிவதற்குக் காரணமாய் இருக்கும் ஒலியின் சிறப்பியல்புகளே அதன் பண்பு (Quality or timbre) எனப்படும். புல்லாங்குழலின் ஓசையும், வீணையின் நாதமும் ஒரே சுருதியைக் கொண்டிருந்தாலும் வேறுபடுகின்றன. மனிதனது குரல் இவை யிரண்டினின்றும் வேறுபடுகிறது. இதன் காரணத்தை முதன் முதலில் அறிந்து காட்டினவர் ஜெர்மனி தேசத்து விஞ்ஞானியான ஹெம்ஹோல்ட்ஸ் என்பவர். சப்தங்கள் எல்லாம் தூயனவல்ல என்றும் அவைகள் உண்டாகும்போது ஒரு ஆதார சுருதியுடனும் அதற்கு இரண்டு முதற் பன்மடங்கு கொண்ட பலவேறு பரிவார சுருதிகளுடன் (overtones) கலந்தே வருகின்றதென்று கண்டுபிடித்தார். பின்னும் இப்பரிவார சுருதிகளின் தன்மை, எண்ணிக்கை,

---

நண்பர்கள் எழுதியனுப்பும் ஆராய்ச்சியுடன் கூடிய கட்டுரைகளும் ரஸமான கதைகளும் பிரசுரத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

வாராவாரம் "பாரத மணி"யில் வெளியாகும் அனுபந்தங்களுக்கு அனுப்பப்படும் விஷயதானங்கள் புள்ளி விவரங்களுக்கு சரியானவையாகவும் தகுந்த ஆதாரத்துடனும் இருக்க வேண்டும்.

தெளிவாக காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதியனுப்பும்படி நண்பர்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

பிரசுரத்திற்காக அனுப்பப்படும் கடிதங்கள் தமிழில் எழுதப்பட வேண்டும். கதை கட்டுரைகள் வேறு மூலங்களிலிருந்து எடுத்து எழுதப்பட்டால் அதைத் தெளிவாக முன்னதாகவே தெரிவித்து விடும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

தமிழரின் அறிவு வளர்ச்சிக்கான எந்த விஷயதானத்தையும் சந்தோஷத்துடன் வரவேற்கிறோம்.

உறைப்பு முலலியவற்றுக்குத் தகுந்தபடியே சப்தங்களின் பண்பு மாறுபடுகிறது என்று அறிந்து காட்டினர். மனிதனது சாரீரம் எல்லா வாத்தியங்களைக் காட்டிலும் உன்னதமாக இருப்பதற்குக் காரணம் அதிகமான பரிவார சுருதிகளைக் கொண்டிருப்பது என்றும் அறிவித்தார். மேலும் மற்ற வாத்தியங்களினால் செய்யமுடியாத உயிரெழுத்து சப்தங்களை மனிதன் உச்சரிக்க முடிவது இன்னுமொரு விசேஷ குணம் என்றுரைத்தார். இதற்குக் காரணம் பாடும்போது இஷ்டப்படி வாய், மூக்கு இவைகளின் அமைப்பை மாற்றி, வெளிவரும் சப்தத்தைக் கட்டுப்படுத்த முடிவதுதான் என்று கூறுகிறார்.

இனி சாரீரப் பயிற்சிக்கு வேண்டிய விஷயங்களைக் கவனிப்போம். ஒவ்வொருவரும் அவர் உட்கொள்ளும் காற்றையோ அல்லது வெளிவிடும் காற்றையோ தசைகளின் உதவியால் அடக்கியாள முடியும். தொண்டை நாண்களைக் கட்டுப்படுத்துவதற்குண்டான தசைகளை காது, மூளை இவைகளின் உதவியைக்கொண்டு தான் ஆள முடியும். பிறவிச் செவிடர்களைப் பேசும்படி செய்து விடலாம். ஆனால் பாடும்படி செய்வது இயலாது. தவிர இடைவிடாக் கேள்வியினால் ராகம் அநேகம் பேர்கள் பாட முடிவது இதே காரணத்தினாற்றான். சாரீரத்தைத் திருத்துமுன் சுவாசத்திற்குண்டான தசைகளைச் சிறந்த முறையில் உபயோகப்படுத்தத் தெரிந்துகொள்ள வேண்டுவது அவசியமாகும். சுவாசகோசங்கள் கொள்ளும் அளவு காற்றை நிரப்பி நிதானமாக வெளியனுப்பப் பழகவேண்டும். பாடும்போது சிலர் தொண்டையை மிகவும் சிரமப்படுத்திக் கொண்டு பாடுவார்கள். அது முற்றிலும் தவறு. அதை மாற்றிக்கொள்ள வேண்டியது அவசியம். சிரமம் யாதொன்றுமில்லாமல் சப்தம் மார்பிலிருந்து வருவது போல் உணர்ச்சி உண்டாவது தான் நல்ல அறிகுறியாகும். முகத்தைக் கண்டவாறு சுளுக்கி விகாரமாக வைத்துக்கொள்ளக் கூடாது. பாடத்தொடங்கும்பொழுது கண்ணாடி முன் உட்கார்ந்து கொண்டு பழகினால் அனாவசியமாக முகத்தை விகாரப்படுத்திக் கொள்ளுவதைத் திருத்திக் கொள்ளலாம். எல்லாவற்றைக் காட்டிலும் சரீரத்தையும், ஆகாரத்தையும், பழக்க வழக்கங்களையும் நன்றாகக் கவனித்து வரவேண்டுவது அவசியமாகும்.

---


வெயில் கோரம்
தெரியாது!

சென்னையில் நவீன முறையில் தொடங்கியிருக்கும்

"கராச்சி
கபே"

KARACHI CAFE
*Air Conditioned Room*

* சம சீதோஷ்ண கூடத்தில் சற்று தங்கிப் பாருங்கள்.
சிற்றுண்டிகள் எல்லாம் வெகு நேர்த்தி.
பேஷான இடம்.

அன்டர்சன் ஹால்,
எஸ்பிளனேட், சென்னை.

டிராம், பஸ் மார்க்கம்
ஹைகோர்ட்டுக்கு எதிரில்



அறிக்கை

கீழ்கண்ட இடங்களில் 'பாரத மணி'யை விற்க ஏஜண்டுகள் தேவை. 25 பிரதிகளுக்குக் குறைந்து ஏஜன்ஸி கொடுக்க முடியாது. டிபாஸிட் கட்டக் கூடியவர்களே விண்ணப்பிக்கவும்.

| | |
|---|---|
| உதகமண்டலம் | திருமயம் |
| நாகூர் | திருத்துறைப்பூண்டி |
| விழுப்புரம் | நன்னிலம் |
| பெங்களூர் | பொள்ளாச்சி |
| பட்டுக்கோட்டை | கரூர் |
| மானாமதுரை | திருவனந்தபுரம் |

மானேஜர்.

விமர்சனம்

# தியாக பூமி டாக்கி

'தியாக பூமி' சினிமாப் படத்தைப் பற்றிச் சென்ற சில மாதங்களாக பெரிய அமளி துமளிப்பட்டு வந்தது. தியாக பூமி கதையைப் படித்தவர்களும் படிக்காதவர்களும் படத்தைப் பார்த்துத் தீர்த்து விடுவதென்று கங்கணம் கட்டிக்கொண்டிருந்தார்கள். "படம் எப்பொழுது வரப்போகிறது? வரட்டும் சொல்கிறேன், பார்!" என்று எல்லோரும் தயாராக இருந்த சமயத்தில் "இதோ வருகிறது, அதோ வருகிறது!" என்று பயமுறுத்தல்கள் கிளம்பின. கடைசியில் சென்ற வாரம் வரப்போவதாகத் தெரிந்ததும் பேனாவைத் தீட்டி வைத்துக்கொண்டேன்.

எப்பொழுது பார்த்தாலும் சினிமாப் படங்களைத் தாக்கிக்கொண்டிருக்கும் 'கல்கி'யின் கதையையல்லவா படம் எடுத்திருக்கிறார்கள். இருக்கட்டும்; இவரது படம் எவ்வளவு அழகாயிருக்கப் போகிறது. நான் அதைத் தாக்குகிற தாக்கில் 'கல்கி' இனிமேல் விமர்சனமே எழுதமாட்டார்... இப்படியாக எண்ணி சந்தோஷப் பட்டுக்கொண்டு கெயிட்டிக்குப் போனேன்.

ஆனால் சந்தோஷம் பெறுவதற்காகப் போய் அங்கே எனக்குக் குழப்பம் தான் ஏற்பட்டது என்பதை ஒப்புக் கொள்கிறேன். படத்தைப் பார்த்துக் கொண்டே வரும்போது, ஒன்றன்பின் ஒன்றாய் அழகிய சந்தர்ப்பங்களைச் சிருஷ்டித்த கல்கியைப்பாராட்டவேண்டுமென்று தோன்றும். உடனே அதியற்புதமாய் நடிக்கும் ஸரோஜாவை வாழ்த்த வேண்டுமென்று தோன்றும். அதற்குப் பிறகு தம் பிராணனையே கொடுத்துப் பாடி, நடித்திருக்கும் சிவனைப் போற்ற வேண்டுமென்று ஆவல் பிறக்கும். அதைத் தொடர்ந்து, டைரக்டர் கே. சுப்ரமணியத்துக்கு 'சபாஷ்!' கொடுக்கவேண்டுமென்று ஆசை உண்டாகும். இப்படிப் பலவிதமான உணர்ச்சிகள் படத்தைப் பார்த்ததும் உண்டாயின.

ஆம், ஆரம்பத்திலிருந்து கடைசிவரையில் படம் நம்மைப் பிரமிக்கச் செய்து விடுகிறது. "இதென்ன? நாம் பார்த்துக் கொண்டிருப்பது தமிழ் படமா? அல்லது ஹிந்திப்படமா? இல்லை. ஹிந்திப் படமாகத்தான் இருக்கவேண்டும். தமிழிலே இவ்வளவு அழகாக வேறு எடுக்கிறார்களாக்கும்?" என்று எண்ணுகிறோம். ஆனால் பேபி ஸரோஜா "ஜில்பி மூஞ்சி மாதிரி இருக்கு உங்க முஞ்சி" என்று வாத்தியார் அம்மாளைப்பார்த்துச் சொல்லும்போது தமிழ்ப்படத்தைத்தான் பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்ற நினைப்பால் நமக்குப் பரவசம் உண்டாகிறது.

ஸ்ரீமதி எஸ். டி. சுப்புலக்ஷ்மியையும் ஸரோஜாவையும் சிவனையும் வைத்துக் கொண்டு இதைவிடச் சிறந்த கதை எழுதியிருக்க முடியாதென்பது வாஸ்தவம். கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் அசல் மிராசுதார் வேஷத்தைவிடச் சிறந்ததாக சிவனுக்கு வேறு எந்த வேஷத்தையும் அமைத்திருக்க முடியாது. அதேமாதிரி, எஸ். டி. சுப்புலக்ஷ்மிக்கும் இது மிகவும் பொருத்தமான கதை. எல்லோரது நடிப்புக்கும் உணர்ச்சிகளுக்கும் பூரண விடுதலை அளிக்கக் கூடிய ஓர் கதையை எழுதியிருக்கிறார் கல்கி. ஹரிஜனசேவை, தேசபக்தி, தியாகம், பெண்கள் விடுதலை, முதலிய சீரிய கொள்கைகளைப் புகுத்தியிருப்பதைப் பார்க்கும்போது இதைவிடக்கதையைமேலாகச்செய்திருக்க முடியாது என்று கூறவேண்டும். கதையில் சில நம்பத்தகாத கட்டங்கள் இருக்கலாம். உதாரணமாக, தந்தைக்குப் பெற்ற பெண்ணை அடையாளம் தெரியாமல் இருப்பதும், பெண் தந்தைக்குத் தெரியாமல் வாழ ஆசைப்படுவதும் இயற்கைக்கு மாறாக இருக்கலாம். ஒரு சின்னப் பெண் கோர்ட்டில் உண்மையை உடைத்து விடுவதே அசாதாரணமென்று சிலர் நினைக்கக்கூடும். ஆனால் மேற்சொன்ன சம்பவங்

களால் "போச்சு! கதையே நாசமாய்ப் போச்சு!" என்று ஒருவரும் கூறமாட்டார்கள்.

"கல்கி"யின் சிருஷ்டிகளான சம்பு சாஸ்திரிகளும், சாவித்திரியும், சாருவும் உயிர் பெற்று திரையில் நம் முன் நடமாடும்போது உண்மையில் நாம் பேருவகை அடைகிறோம். மேற்சொன்னவர்கள் சாதாரண கதாபாத்திரங்கள் மட்டுமல்ல. தமிழ்நாட்டு சமூகத்தின் சுகதுக்கங்களுக்கும் அபிலாஷைகளுக்கும் பிரதிநிதிகளாக இருப்பவர்கள். அவர்களது வெற்றியும் வீழ்ச்சியும் எல்லோருக்கும் சொந்தமானது. ஆம்; சாவித்திரியின் தியாகம் பெண்கள் விடுதலை இயக்கத்தின் எதிர்கால வெற்றியைக் குறிக்கிறதென்பதில் சந்தேகமில்லை.

நடிகர்களுக்காக இக் கதை எழுதப்பட்டிருக்கிறபடியால் வேஷப்பொருத்தத்தைப் பற்றி ஒன்றும் கூற வேண்டியதில்லை. ஆனால் கதையின் தத்துவத்தை நடிகர்கள் உணர்த்தி விட்டார்களா என்றுதான் கவனிக்க வேண்டும். அப்படிப் பார்க்கப் போனால், முக்கால்வாசி படம் வெற்றியடைந்து விட்டது என்று ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாகிறோம். எஸ். டி. சுப்புலக்ஷ்மி கூடுமான வரையில் நன்றாக தனது பாகத்தை நடித்து விட்டார். ஆனால் பின்வரும் இரண்டு கட்டங்கள் நன்றாக அமைந்திருந்தால் மேற்சொன்ன 'கூடுமானவரையில் நன்றாக' என்பதை எடுத்து விட்டு 'ரொம்ப நன்றாக' என்று போடும்படியிருந்திருக்கும். முதலாவதாக; ஊமையின் படத்தைப் பார்த்துவிட்டு சாவித்திரி துயரப்படும் கட்டம் சரியாக உணர்த்தப் படவில்லை. அந்த சமயத்தில் சோகப் பாட்டைக் கொடுத்து உணர்ச்சியைக் கொன்றுவிட்டார்கள். இந்த இடத்தில் பாட்டே அவசியமில்லை. 'குளோஸ் – அப்' கொடுத்து முகபாவத்தை உணர்த்தியிருக்கலாம். இரண்டாவதாக, கோர்ட்டில் உமாராணி உணர்ச்சியின் கதவுகள் பரிபூரணமாகத் திறக்கப்படவில்லை என்பது என் கருத்து. உண்மையில் சாருவைப் பார்க்கும்போது உமாராணி அடைந்த தாயின் உணர்ச்சிகளைச் சித்தரிக்கும் கட்டத்திற்குத்தான் இப்படத்தில் முதல் ஸ்தானம் கொடுக்க வேண்டும்.

பாபநாசம் சிவன் ரொம்பவும் சிரமப்பட்டு நடித்திருக்கிறார். அவரால் இவ்வளவுதான் நடிக்க முடியும். இதற்கு மேல் முடியாது.

ஸ்ரீதரனாக நடிப்பவர் சினிமாவுக்குப் புதியவராயிருந்தபோதிலும் "பேஷ்! பலே!" என்று சொல்லக்கூடிய அளவுக்கு நடித்திருக்கிறார்.

பேபி ஸரோஜா வெகு அழகாக நடித்திருக்கிறாளென்றால் ஆச்சரியமல்ல. நடிக்கவில்லை என்றால்தான் ஆச்சர்யம். அத்தகைய ஆச்சரியம் பகவான் கிருபையால் நமக்கு உண்டாகவில்லை. குழந்தை ஒவ்வொரு சமயம் பேசும்போதும், நாட்டியம் ஆடும்போதும் நாம் மெய் மறந்து போகிறோம். ஸரோஜாவின் நடனத்தைப் பார்க்க ஒரு தடவை அல்ல மூன்று தடவை தியாக பூமியைப் பார்க்கவேண்டும்.

நடிப்புக்கு இந்தப் படத்தில் முக்கியஸ்தானமே ஒழிய சங்கிதத்திற்கல்ல. ஆனால் பின்னணி சங்கீதம் நன்றாயிருந்ததென்று கூறியாகவேண்டும்.

தியாக பூமி படத்தினால் நான் வெகு நாளாகக் கண்டு கொண்டிருந்த ஒரு கனவு பூர்த்தியாயிற்று. "சமீபத்தில் தமிழ் நாட்டில் ஓர் நல்ல தமிழ்ப் படம் தோன்றப் போகிறது. தமிழ் சினிமாத் தொழிலுக்கு விமோசனம் உண்டாகப் போகிறது" என்று பகற்கனவு கண்டு கொண்டிருந்தேன். அந்தக் கனவு இப்போது நனவாகி யிருக்கிறது.

(வே. சு. ரா.)



"திருநீலகண்டரில்" ஓர் காக்ஷி

# பாரத மணி

**சந்தா**

உள்நாடு ரூ. 4 (தபால் செலவு உள்பட)
வெளிநாடு ரூ. 6 (தபால் செலவு உள்பட)

தனிப்பிரதி விலை 1 அணா.

**விளம்பரம்**

இந்தியாவில் செய்யப்பட்ட சுதேசி சாமான்கள் விளம்பரப் படுத்த விசேஷ வசதி அளித்திருக்கிறது. $\frac{1}{8}$ பக்கம் (பத்து வரி) விளம்பரங்கள் ஒரு தடவைக்கு ரூ. 2 வீதமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

நீடித்த ஒப்பந்த விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

**மானேஜர்.**


## போஷாக்கில்லாமல் இருக்கிறதா?



உங்கள் கூந்தல்
இயற்கையான ஆகாரமில்லாமல்
உயிரற்றுப் போயிருக்கிறதா?
அப்படியானால் அந்தக் குறையை நீக்க

## 'கெஸ்ரைன்'

விலை அணா 12.

**உபயோகியுங்கள்.**

அது கேசத்திற்கு வனப்பையும் போஷாக்கையும் கொடுக்கக் கூடியது.

**விக்டோரியா டிபோ,**
வடக்கு மாட வீதி, மைலாப்பூர், சென்னை.